
# காலச் சுவடுகள்





நடன. காசிநாதன். எம்.ஏ.,

# காலச் சுவடுகள்



நடன. காசிநாதன், எம். ஏ.,

கிடைக்குமிடம்

**சேகர் பதிப்பகம்**

56, உஸ்மான் ரோடு,

தியாகராய நகர் : : சென்னை-17.

முதற்பதிப்பு : ஜனவரி, 1973.


தமிழன் பதிப்பகம்
சென்னை-83

விலை ரூ 2-50

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
சென்னை-14.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர்

**அறிஞர் திரு. இரா. நாகசாமி** எம்.ஏ., அவர்களின்

# அணிந்துரை

நல்ல பல கோயில்களைப்பற்றி வரலாற்று அடிச்சுவட்டில் எழுதப்பட்டுள்ளது இந்நூல். இடிபாடுற்று, கவனிப்பார் இல்லாது இருக்கும் சில கோயில்களின் பெருமையைக் கல்வெட்டு ஆதாரங்களோடும், கட்டடக்கலை, சிற்ப அமைதி ஆகியவைகளின் துணை கொண்டும் நன்கு எடுத்துக்காட்டி உணரச் செய்திருப்பது நல்லதொரு முயற்சியாகும். வேடியப்பனைப் பற்றியும் ஒரு கட்டுரை இடம் பெற்றுள்ளது அதில் பல புதிய செய்திகள் இடம் பெற றுள்ளன. அதில் ஊரார் பாடும் ஓர் அழகிய நாட்டுப் பாடல் இடம் பெற்றுள்ளது.

**வெள்ளைக் குதிரையேறி வெளிப்பட்டு வரவேண்டும்**
**வெண்கலத் தமுக்கு போட்டு வீசி நீ வரவேண்டும்**
**மூங்க வனத்தை விட்டு வெளிப்பட்டு வாருமப்பா.**

இப்பாட்டைப் படிக்கும்போது நமது நாட்டுப்புற மக்களிடத்தே நம் பண்பும் வரலாறும் எவ்வளவு சிறப்பாக நிறைந்துள்ளன என்று எண்ணி உள்ளம் பூரிக்கிறது.

சிறந்த தமிழக வரலாற்றை எடுத்துக் கூறும் கல்வெட்டுகள், கட்டடங்கள், எழி

லார்ந்த சிற்பங்கள், வண்ண வண்ண ஓவியங்கள் ஏராளமாக இருக்கின்றனவே! அவற்றின் வரலாற்றை நாம் இன்னும் அறிய முயலவில்லையே! போற்றத் தெரியவில்லையே என்ற ஏக்கமும் பிறக்கிறது.

வரலாற்றையே தெய்வமாக உருவகிக்க உள்ளம் விழைந்தது. இத்தெய்வம் அனைவரும் அறியும் வகையில் உலாவாக வர வேண்டும் எனத் தோன்றியது.

அது எவ்வாறு வர வேண்டும்? 'வரலாற்றுத் தெய்வம் வெள்ளைக் குதிரை ஏறி ஜாம்ஜாம் என வெளியே வர வேண்டும். நல்ல தமுக் கடித்து வர வேண்டும். உள்ளதை மறைத்து வளர்ந்து நிற்கும் காட்டை விட்டு வெளிப்பட்டு வர வேண்டும்' எனத் தோன்றியது. மீண்டும் அப் பாடலே நினைவுக்கு வந்தது.

**வெள்ளைக் குதிரையேறி வெளிப்பட்டு வரவேண்டும்**
**வெண்கலத் தமுக்கு போட்டு வீசிநீ வரவேண்டும்**
**முங்க வனத்தை விட்டு வெளிப்பட்டு வாருமப்பா.**

அந்த உலாவுக்குக் காட்சியாக இந்நூல் வெளி வருகிறது. ஆசிரியர் நல்ல ஆர்வத்துடனும் ஆற்றலுடனும் வரலாற்றுச் சுவட்டில் அடி வைத்துள்ளார். இவர் போன்ற இளம் எழுத்தாளர்களின் நூல்களுக்கு மக்கள் அளிக்கும் ஆதரவில்தான் வரலாற்று உலாவின் முன்னேற்றம் உள்ளது. அது சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

# நுழைவாயில்

ஆதி மனிதன் தனது எண்ணத்துக்கு எட்டாத அனைத்தையும் தெய்வமாகக் கருதினான். நீரையும், நெருப்பையும், விண்ணையும், மண்ணையும் அவன் தெய்வமாகப் போற்றி வணங்கினான். ஏன்? அவைகள் அனைத்தும் அவனது அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளாக இருந்தன.

பச்சை இறைச்சியையும் பசுங்கனிகளையும் உண்டு வந்த மனிதன், தற்செயலாக நெருப்பின் அருமை அறிந்த நாள் முதல் நெருப்பை வணங்க ஆரம்பித்தான். ஒவ்வொன்றும் அவனது தேவையைப் பூர்த்தி செய்யும்போது அவைகள் அவனால் வெகுவாக மதிக்கப்பட்டன.

தன்னால் மதிக்கப்பட்ட அனைத்துக்கும் நிலையான ஒரு இடத்தைத் தனது மனத்தில் அளித்திடத் தீர்மானித்தான்.

மனிதனின் தொடக்க நிலை குழந்தை உள்ளந்தானே! குழந்தை கற்பனையாக ஒன்றை உள்ளத்தில் வைத்துப் போற்றுவதைவிட உருவம் ஒன்றைப் பார்த்து மனத்தில் படிய வைத்துக் கொள்வது எளிதல்லவா? அதைப் போன்றே அவனும் தன்னால் போற்றப்படும் அனைத்துக்கும் உருவங்கள் வடிக்க முற்பட்டான்.

அந்த உருவங்கள்தான் நாளாவட்டத்தில் பலவித வளர்ச்சிகளடைந்து இன்று காணும் சிற்பங்களாகத் தோற்றமளிப்பவை. அவ்வுருவங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக வைத்து வணங்குவதைக் காட்டிலும் அவைகளை ஒருசேர ஒரே இடத்தில் வழிபடுவது நல்லதல்லவா? அதன் காரணமாக எழுந்ததுதான் கோயில்!

இத்தகைய கோயில் தமிழகத்தில் பலநூறு ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க

வேண்டாம்' என்ற கொள்கையைக் கொண்டிருந்தவர் களல்லவா தமிழர்கள்! ஆதலால் ஊர்தொறும் கோயில்கள் எடுப்பித்து இருந்தனர்.

இப்பொழுதிருக்கின்ற கோயில்கள் காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப் படாதவை. முழுமையும் அடித்துச் செல்லப்படவில்லை யென்றாலும் வடுக்கள் பல ஏற்பட்டுள்ளன. அவைகளையும் தாங்கி நிலைத்து நிற்கின்ற கோயில்களில் ஒரு சிலவற்றைப் பற்றித்தான் நம்மில் பலர் அறிந்துள்ளோம்.

நம்மில் மிகப் பலருக்கு இன்னும் அறிமுகம் ஆகாத பல கோயில்கள் தமிழகத்தில் உள்ளன. அவைகளில் ஒரு சில வற்றைப் பொதுமக்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும், மாணவ நண்பர்கட்கும் அறிமுகப்படுத்துவதே இந்நூலின் நோக்கமாகும்.

இந்நூலுள் பத்து கட்டுரைகள் அடங்கியுள்ளன. ஏழு கட்டுரைகள் பழமையான கோயில்களைப்பற்றியும்; இரண்டு, பழமையான ஊர்களைப்பற்றியும்; ஒன்று, சிற்பங்கள் பற்றியும் எழுதப்பெற்றுள்ளன.

இவைகள் அனைத்துமே காலங் காலமாக இருந்து அழிந்து போனதன் சுவடுகளாக இன்று விளங்கி, மறைந்துபோன நாகரிகத்தையும், பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் இன்று பறைசாற்றுவதால் அவைகளுக்குக் "காலச் சுவடுகள்" என்று பெயர் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் உள்ள பனைமலை தாலகிரீசுவரர் கோயில் என்ற கட்டுரை தவிர, மீதி அனைத்தும் கீழ்க் கண்ட இதழ் களில் வெளியானவை.

கட்டுரை எண்:

1. "தமிழகம்" (ஆண்டு இதழ், தொ. பொ. துறை.)
2. மித்திரன் ஞாயிறு மலர்
3, 4, 5. தினமணிச் சுடர்

7, 8. இந்து (ஆங்கிலத்தில்)

9. கொங்கு

10. தமிழரசு

இக்கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து வெளியிட எண்ணி மேலே குறிப்பிட்ட இதழ்களின் ஆசிரியர்களுடைய அனுமதியைக் கேட்ட பொழுது தயக்கம் காட்டாமல் அனுமதி அளித்த அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு அமைய எனக்கு அவ்வப்போது அறிவுரை நல்கியும், நான் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்நூலுக்கு அணிந்துரை நல்கியும், பெருமை சேர்த்திட்ட எனது வணக்கத்திற்குரிய ஆசிரியரும், தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநருமான திருமிகு. இரா. நாகசாமி அவர்களுக்கு நான் பல்லாற்றானும் நன்றி கூறக் கடமைப் பட்டவன்.

இப்புத்தகத்தை நல்ல முறையில் பதிப்பித்த என் கெழுதகை நண்பர் திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர் கட்கும், முகப்பு ஓவியத்தை வரைந்து அளித்திட்ட ஓவியர் 'கண்மணி' அவர்கட்கும், அழகாக அச்சிட்டளித்த மூவேந்தர் அச்சக உரிமையாளர் திரு. முத்து அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிழற்படங்களைத் தந்து உதவிய தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறைக்கும் என் நன்றி.

எனது எழுத்து ஒரு நூல் வடிவில் வெளிவருவது இதுவே முதல் தடவையாகும். இதனைத் தமிழக மக்கள் ஏற்று என் போன்றோரை மேலும் இவ்வாறு எழுதும் பணியில் ஊக்குவித்தருள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

நடன. காசிநாதன்

காலச் சுவடுகளின்

## காட்சி அரங்கம்

# சேந்தமங்கலம் ஆபத்சஹாயேச்சுரர் ஆலயம்

தென்னார்க்காடு மாவட்டத்தில், சேந்தமங்கலம் என்ற ஒரு சிற்றூர் உள்ளது. இது சென்னை—திருச்சி நெடுஞ்சாலையில் விழுப்புரத்திலிருந்து சுமார் இருபது கல் தொலைவில் தெற்கே உள்ளது.

இவ்வூர், சேர்ந்தமங்கலம் என்றும், சேந்தவன் மங்கலம் என்றும், ஜெயந்தமங்கலம் என்றும் வழங்கப் பெற்றுள்ளது.

இங்கு குடி கொண்டிருக்கும் ஆபத்சஹாயேச்சுரர் ஆலயம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இக்கோயிலின் மூலவர் வானிலை கண்டீஸ்வர முடையார் என்று கி பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலும், ஆபத்துக் காத்தருளிய நாயனார் என்று கி. பி. 16-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த விஜய நகர மன்னர்கள் காலத்தியக் கல்வெட்டுகளிலும் குறிக்கப் பெறுகிறார்.

## கட்டியவன் யார்

இக்கோயிலை, கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் மணவாளப் பெருமாள் என்ற காடவராயன், தன் பெயரால் "வானிலைகண்டீசுவரம்" என்று எடுப்பித்தான். இம் மன்னனுடைய மனைவியும் சமயப் பற்று மிக்கவள். திருவெண்ணெய்நல்லூரிலுள்ள பெருமாள் கோயிலுக்கு அவள் திருப்பணி செய்வித்தாள் என்பதைக் கல்வெட்டு மூலம் காண முடிகிறது.

## தலை நகரம்

இவர்களுடைய காலத்தில்தான் சேந்தமங்கலம் தலைநகராக ஆக்கப்பெற்று பல பெரு நகரங்களோடு தொடர்பு கொள்ளும் வகையில் பெருவழிகளும் அமைக்கப்பெற்றன. இவ்வூரிலிருந்து சென்ற பெருவழி ஒன்றுக்குச் "சேந்தமங்கலப் பெருவழி" என்று பெயர் வழங்கி வந்தமை கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது.

## சேந்தமங்கலச் சிறை

சோழப் பேரரசன் மூன்றும் இராசராசனுக்கும், காடவ மன்னன் கோப்பெருஞ் சிங்கனுக்கும் நிகழ்ந்த போரில் கோப்பெருஞ் சிங்கன் வாகை சூடி, மூன்றும் இராசராசனையும், அவனது பட்டத்தரசியையும், மற்றவர்களையும் சேந்தமங்கலத்தில் சிறை வைத்தான் என்பதைத் திருவயிந்திபுரக் கல்வெட்டும், "காலகளப" என்பவர் எழுதிய 'கத்யகர்ணாமிர்தம்" என்ற நூலும் விவரிக்கின்றன. ஆனல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில், "வேந்தர்கள் அதுவரையில் கண்டிராத அளவில் மிகவும் நேர்த்தியாக விளங்கிய கோட்டையைப் பெற்றிருந்த சேந்தமங்கலம் முற்று

தலுக் குள்ளாகி, பின்னர் பல்லவ மன்னனிடமே திருப்பி அளிக்கப்பெற்றது'' என்பதை முதலாம் சடையவர்மனின் மெய்க்கீர்த்தி தெளிவாகக் காட்டு கிறது.

### தெலுங்கு சோழர் ஆதிக்கம்

அதன்பின்னர் காடவ மன்னர்களின் செல்வாக்குக் குன்றி, தெலுங்கு சோழர்களின் செல்வாக்கு உயரத் தொடங்கியபோது, சேந்தமங்கலம் தெலுங்கு சோழர் களின் இரண்டாம் தலைநகராக ஆக்கப்பெற்று சிறப் போடு திகழ்ந்தது என்பதை, பாண்டிய மன்னன் ஸ்ரீவிக்ரம பாண்டியன் தனது மெய்க்கீர்த்தியில் ''ஜயந்தமங்கல புராதீஸ்வர வீரகண்ட கோபால புஜங்க விஹங்கராஜ'' என்று கூறிக்கொள்வதால் புலனாகிறது.

### நாட்டுப் பிரிவு

சேந்தமங்கலமான இவ்வூர், விஜயநகர மன்னர் களின் காலத்தில் மிலாடு என்னும் ஜனநாத வள நாட்டைச் சேர்ந்த குறுக்கைக் கூற்றத்தில் அமைந் திருந்தது. ஆனால் கி. பி. 15–ஆம் நூற்றாண்டில், வீர பிரதாப தேவர் ஆட்சிக் காலத்தில் இவ்வூர், நடுவில் மண்டலத்தில் உள்ள இராஜராஜ வளநாட்டைச் சேர்ந்த திருமுனைப்பாடி நாட்டில் சேர்ந்திருந்ததாகத் தெரிய வருகிறது.

### நினைவுச் சின்னம்

ஒரு சிறந்த தலைநகரமாக இருந்து மிகுந்த வனப்போடு காட்சியளித்த இவ்வூர், இன்று தனது

பெருமையைப் பறை சாற்றிக் கொள்ள ஒரே ஒரு நினைவுச் சின்னத்தைத் தான் தன்னகத்தே கொண்டுள்ளது. அதுதான் இன்று "ஆபத்ஸஹாயேச்சுவரர் ஆலயம்" என்று வழங்கும் திருக்கோயிலாகும். ஊரின் மேற்புற எல்லையில் ஓங்கி நிற்கும் இதன் அழகே அழகு. இக்கோயில் காடவ குல மன்னர்களின் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு ஆகும். கட்டடக் கலையைக் கொண்டு காணும்போது பிற்காலச் சோழர்களின் கட்டடக்கலையை ஒத்தே இது காணப்படுகிறது.

## அமைப்பு

கிழக்குப் பக்கம் பார்த்துக் கொண்டிருக்கும் இக் கோயிலில் கிழப்புறம் மட்டும் ஒரு கோபுரம் காணப்படுகிறது. கோபுரத்தின் வழியே உள்ளே நுழைந்தால், மூலவரைப் பார்த்துக் கொண்டிருக்கும் நந்தியை முதலில் காணலாம்.

அதனை அடுத்து தூண்களால் தாங்கப் பெற்றிருக்கும் முக மண்டபத்தைக் காண நேரும். இம்மண்டபத்தில் வ க்குப் பக்கத்தில் ஒரு சிறு சன்னதி உள்ளது அதில், பிரமன் தனது அன்னவாகனத்தோடு காட்சி தருகிருர்.

முக மண்டபத்தின் வழியே உள்ளே சென்ருல் அர்த்த மண்டபம், அந்தராளம் ஆகியவைகளைத் தாண்டி உண்ணுழியை அடையலாம்.

இதன் மேலே எழுப்பப்பட்டுள்ள விமானம் இரண்டு அடுக்குகளைக் கொண்டதாக உள்ளது. விமானத்தின் உச்சியில் எண்பட்டை வடிவமான சிகரம் உள்ளது.

இக்கோயிலைச் சுற்றி முதலாம் திருச்சுற்று மாளிகையும் கல்லால் எடுப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் திருச்சுற்றில், வடக்குப் பக்கத்தில், அதாவது மூலவரின் இடது பக்கத்தில், அம்பாளின் ஆலயம் உள்ளது. இவ்வம்பாளின் பெயர் திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் என்பது ஒரு கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது.

திருச்சுற்று மதில்களின் அமைப்பைக் காணும் போது இக்கோயில் பிற்காலத்தில் ஒரு கோட்டையாக வும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க முடி கிறது.

## ஏழிசை மோகன் சந்தி

இக்கோயிலை எடுப்பித்தவன் மணவாளப் பெருமாள் என்ற காடவகுல மன்னன் என்பது முன்னரே கூறப் பட்டுள்ளது. அவன் தான் எடுப்பித்த கோயிலில் தன் பெயரால் "ஏழிசை மோகன் சந்தி" என்ற ஒரு சந்தி வழிபாட்டையும் ஏற்படுத்தியுள்ளான்.

## கோப்பெருஞ் சிங்கன்

இம்மன்னனின் அருமைந்தன் கோப்பெருஞ்சிங்க னும் தனது பெயரால் "எல்லாந்தலையான பெருமாள்" என்ற ஒரு திருநாளை ஏற்படுத்தி யிருக்கிறான். அவன் தனது மற்றொரு பெயரால் "அய்யணங்காரன் சந்தி" என்ற மற்றொரு சிறப்பு வழிபாட்டையும் இக்கோயிலில் ஏற்படுத்தியுள்ளான் என்று தெரியவருகிறது. இதன் மூலம் அவனுக்கு அய்யணங்காரன் என்ற மற்றொரு பெயரும் இருந்து வந்தமை புலனாகிறது.

## பிற்கால மன்னர்கள்

பாண்டிய, விஜயநகர மன்னர்களும் இதன்பால் ஈடு பாடு கொண்டு அறக்கொடைகள் அளித்துள்ளனர். பாண்டிய மன்னர் வீரபாண்டியதேவர் தம் பெயரால் "பூமிபுத்திரன் சந்தி" என்ற ஒரு வழிபாட்டை ஏற் படுத்தியுள்ளார். இதன் மூலம் வீரபாண்டியனுக்குப் பூமிபுத்திரன் என்ற ஒரு பட்டப் பெயரும் இருந்து வந்தமை தெரிகிறது.

பராக்கிரம பாண்டியன் காலத்தில் ஒரு குறுநிலத் தலைவனாக இருந்த ஸ்ரீரங்கநாத நாயக்கர் என்பார் தமது பெயரான "கண்டர்கண்டன்" என்ற பெயரால் ஒரு வழி பாட்டை ஏற்படுத்தியுள்ளார்.

தங்களால் ஏற்படுத்தப் பெற்ற சிறப்பு வழிபாட் டிற்கும், திருநாள்களுக்கும் செலவுக்காக நிலங்களையும், பசுக்களையும், பொன்னையும் கொடையாக அளித் துள்ளனர். நுந்தா விளக்குகளும் இக்கோயிலுக்கு அளிக்கப் பெற்றன.

## ஆலால சுந்தரன் கூடம்

இக்கோயிலில் உள்ள ஒரு மண்டபம் "ஆலால சுந்தரன் கூடம்" என்று அழைக்கப்பெற்று வந்தமை கல்வெட்டுமூலம் தெரியவருகிறது.

## அம்பாள் சன்னதியின் காலம்

அம்பாள் சன்னதியான திருக் காமக்கோட்ட முடைய நாச்சியார் ஆலயமும் இக்கோயிலின் மூலவரை எழுந்தருளுவித்த காலத்திலேயே எடுக்கப்பெற்றிருக்க

வேண்டும்; அல்லது கோப்பெருஞ் சிங்கன் காலத்தில் எழுப்பப் பெற்றிருக்க வேண்டும்.

ஏனெனில் கோப்பெருஞ் சிங்கன் காலத்தில் அரையன் உதையப் பெருமாள் என்னும் தொண்டைமான், வானிலை கண்டீஸ்வரமுடையார் கோயிலுக்கும், திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் கோயிலுக்கும் ஒரே சமயத்தில் நந்தாவிளக்குகள் அளித்ததிலிருந்து அவை இரண்டும் அப்பொழுதே வழிபாட்டில்இருந்தமை அறியலாம்.

### பிற கோயில்கள்

இவை மட்டுமல்லாது ஒரு துர்க்கைக் கோயிலும் சேந்தமங்கலத்தில் இருந்திருக்கிறது. அது ஊரின் தெற்குப் பக்க வாயிலின் அருகில் அமைந்திருந்தது. அத்துர்க்கைக் கோயில் விஜயநகர மன்னன் வீரபிரதாப மஹாராயர் காலத்தில், அதாவது கி. பி. 1430-இல் புதுப்பிக்கப் பெற்றுள்ளது.

### விழாக்கள்

இக்கோயிலின் மூலவரான ஆபத்துக்காத்தருளிய நாயனார் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் சதய நட்சத்திரத்தன்று திருத்தேரில் பவனி வந்துள்ளார் என்பதைக் கல்வெட்டின் உதவியால் உணர முடிகிறது.

### அதிகை நாயகன் நாழி

இக்கோயில் முப்பது வட்டத்து பிராமணர்களின் மேற்பார்வையில் இருந்து வந்துள்ளது. இக்கோயிலில் விளக்குகள் எரிப்பதற்காக அளிக்கப்பெறும் நெய்யை "அதிகை நாயகன் நாழி" என்ற படியால்அளந்துள்ளனர்.

★

# கல்வெட்டுகளில் காணும் காவிரிப்பூம்பட்டினம்

## பண்டைய ஆதாரங்கள்

**பா**லி மொழியில் எழுதப்பட்ட "மிலிந்த அரசரின் வினக்கள்" என்ற நூலில், காவிரிப்பூம்பட்டினம் "கோலபட்டன" என்று குறிருக்கப்பட்டிக்கிறது.

கி.பி. ஐந்தாம் நூற்ருண்டில் சோழ நாட்டில் வாழ்ந்து, பலபாலி கிரந்தங்களே எழுதிய புத்த தத்தர் என்ற அறிஞர் தாம் இயற்றிய "அபிதம்மா –வதாரம்" என்ற நூலின் இறுதியில் புகாரின் வாணிபம், மாட மாளிகைகள், பூங்கா முதலியவை களின் சிறப்பையும் தாம் இருந்த மடத்தின் சிறப்பு பற்றியும் வெகுவாகப் புகழ்ந்திருக்கிருர்.

கி.பி. முதலாம் நூற்ருண்டைச் சேர்ந்த மேல் நாட்டு யாத்திரிகர் தாலமி அவர்கள் குறிப்பிட்டுள்ள

“சோபரிஸ் எம்போரியம்” என்ற சொல் இந்நகரத்தையே குறிக்குமென கூறுகிறார்கள்.

அக்காலத்தில் வாழ்ந்த வேறொரு மேனாட்டு ஆசிரியர் ஒருவரால் எழுதப்பட்ட “பெரிப்லூஸ்” என்ற நூலிலும் இந்நகரத்தைப் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன.

இந்நகர்ச் சிறப்பைப்பற்றி விரிவாகவும் விளக்க மாகவும் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணி மேகலை முதலிய பண்டைத் தமிழிலக்கியங்கள் எடுத் துரைக்கின்றன.

இந்நகரைக் காகந்தன் என்ற அரசன் காத்து வந்ததால் ‘காகந்தி’ என்ற பெயரும் உண்டு என் பதை மணிமேகலை கூறுகிறது.

## நகர் அமைப்பு

இந்நகர் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிக்கு மருவூர்ப் பாக்கம் எனவும் கடற்கரையின் தொலைவில் உள்ள பகுதிக்குப், பட்டினப் பாக்கம் எனவும் வழங்கி வந் துள்ளது.

இவ்விரு பகுதிக்கும் இடைப்பட்ட வெளியில் நாளங்காடி அமைந்திருந்தது.

நாளங்காடியின் மேற்புறமாக உள்ள பட்டி னப் பாக்கத்தில் அரசர் வீற்றிருக்கும் திருநகரம் அழகுற

395



காட்சியளித்தது. இதன்கண் பிறவா யாக்கைப் பெரியோனுகிய சிவபெருமானுக்குரிய திருக்கோயிலும் ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோவிலும், நீலமேனி நெடியோனுகிய திருமால் கோயிலும் 'மாலவெண்குடை மன்னவன் வாழும் அரண்மனையும்' அதனைச் சூழ அமைந்த அரசப் பெருந் தெருவும் 'அமைச்சர், படைத் தலைவர் முதலிய அரசதிகாரிகளின் இருப்பிடங்களும், பெருங்குடி வணிகர் வாழும் மாடவீதிகளும், உழுவித்துண்போராகிய வேளாண்மாந்தர் வாழும் பெருந் தெருக்களும், தாம் தம் வல்ல நுண்கலைத் திறன்களால் மன்னரையும் நாட்டு மக்களையும் மகிழ்விக்க வல்ல கலைச் செல்வர் உறைவிடங்களும் அமைந்திருந்தன எனச் சிலப்பதிகாரம் செப்புகிறது.

## கல்வெட்டு ஆதாரம்

இவ்வளவு புகழோடும் பொலிவோடும் விளங்கிய இந்நகர் பற்றி கல்வெட்டுகளில் போதிய ஆதாரம் கிடைக்கப் பெற்றில. கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டுக்குப் பிந்தைய கல்வெட்டுகளில்தான் இந்நகர் பற்றிக் குறிக்கப் பெற்றுள்ளது.

## பார்கூத்து கல்வெட்டு

இதற்கும் முன்னதாகவே கி. மு. இரண்டு அல்லது முதல் நூற்றுண்டைச் சார்ந்த, இப்பொழுது கல்கத்தாவின் இந்திய கலைக்கூடத்திலே உள்ள பார்கூத் திருச்சுற்று வேலிக் கல்வெட்டுகளில் காணப்படும் 'காகந்தி' என்னும் சொல் இந்நகரைத்தான் குறிக்கும் என்று கூறப்படுகிறது.

## நாசிக் கல்வெட்டு

ஆனால் நாசிக்கில் உள்ள புத்தக் குகைக் கல் வெட்டுகளில் உள்ள "ககன்ட்" என்ற ஊரைக் காணும் போது பார்கூத் திருச்சுற்று வேலிக் கல்வெட்டும் நாசிக் அருகிலே உள்ள ககன்ட் என்ற இந்த ஊரைத்தான் குறிக்கிறதோ என்ற ஐயம் எழுகிறது.

## 'ககண்ட்'தான் காகந்தியா?

நாசிக் கல்வெட்டு கி.பி. இரண்டாம் நூற்றுண்டின தாக இருக்கின்றது. அதோடல்லாமல் அதில் ககன்ட் என்ற ஊர் என்றுதான் குறிக்கப்படுகிறதே தவிர, நகரம் என்றுவழங்கப்படவில்லை. சைனகுறிப்பேடுகளும்மேலே குறிப்பிட்ட பார்கூத் திருச்சுற்று மதிற் கல்வெட்டும் 'காகந்தி என்னும் நகரம்' என்றே கூறுகின்றன. ஆத லால் அக் காகந்திப் புகார் நகரைத்தான் குறிக்கிற தெனக் கொள்ளலாம்.

அதுவுமல்லாமல் காஷ்மீரத் தேசத்தைச் சார்ந்த ஒரு சிலர் தமிழ் நாட்டு ஆலயங்கட்குக் கொடை அளித்துள்ளதைக் காணும்போது தமிழ்நாட்டாரொரு வர் பார்கூத் ஸ்தூபாவிற்குக் கொடை வழங்கியிருந் தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

## காவீர பட்டணம்

இங்கே மற்றொரு ஐயமும் எழலாம். பார்கூத் கல் வெட்டிற்கு எல்லாவற்றுக்கும் முந்தியதாகக் கருதப் படும் புத்தக் கதைகளில் 'காவீரபட்டண' என்று குறிப்பிட்டிருக்கையில், பார்கூத் கல்வெட்டில் மட்டும்

ஏன் காகந்தி என்று குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று கேட்டால் நியாயத்தின் பாற்பட்டதேயாகும். ஆனால் காவிரிப்பூம்பட்டினத்திற்குப் பல பெயர்கள் வழங்கி வந்துள்ளமையால் இக்காகந்தி என்ற பெயரைத் தான் பார்கூத் மக்கள் தெரிந்திருக்க வேண்டும் என நாம் எண்ணலாம்.

## நம்பிக்கையூட்டும் கல்வெட்டுகள்

அது அவ்வாறிருக்க, நம்பிக்கையான கல்வெட்டு ஆதாரங்கள் கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல்தான் காணப்படுகின்றன. இதுவும் காவிரிப்பூம்பட்டினம் பற்றி மிகக் குறைவாகவே கல்வெட்டுகளில் காணப் படுகின்றன.

மாயவரம் தாலுக்காவில் உள்ள சாயக்காடு, பல்லவனீச்சுரம், திருக்கடையூர், செம்பனார் கோவில் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுகளில் இந்நகரைப் பற்றியும், இந்நகர் எந்த நாட்டில் அடங்கி யிருந்தது என்பது பற்றியும், நகரிலே அமைந்திருந்த ஒரு சில ஆலயங்கள் பற்றியும், அவ்வாலயத்திற்கு அரசகுடும்பத் தினரும் தனிப்பட்டவர்களும் அளித்துள்ள கொடை பற்றியும், நகர்வாழ் மக்கள் பற்றியும் ஓரளவு கூறு கின்றன.

## சாயக்காடு

கல்வெட்டாராய்ச்சியாளர் திரு சதாசிவ பண்டாரத் தார் தாம் எழுதிய "காவிரிப்பூம்பட்டினம்" என்ற நூலில், முன்பிருந்த இம்மாநகர் எந்த அளவு பரப்புடைய

தாக இருந்திருக்குமென குறிப்பிடுகையில், இப்பொழுது காணப்படும் பல ஊர்களைக் குறிப்பிட்டு அவைகட்கும் சங்க கால நூல்களிலே குறிப்பிட்டுள்ள புகாரின் முக்கிய இடங்களுக்கும் ஒப்பிடுகின்றார்.

இப்பொழுது காணப்படும் சாய்க்காட்டை, “தண் புகார்ச் சாய்க்காட் டெந்தலைவன்,” “காவிரிப்பூம்பட்டி னத்துச் சாய்க் காட்டெம் பரமேட்டி” என வரும் திரு ஞானசம்பந்தர் திருப்பதிகத் தொடர்களில் காணப்படும் புகார் நகரத்தின் ஒரு பகுதியே என வலியுறுத்துகின்றார்.

## சம்பாபதி கோயில்

சாய்க்காட்டிலுள்ள திருக்கோயிலின் தெற்கே கால் கல் தூரத்தில் புகார் நகரத் தெய்வமாகிய சம்பாபதி கோயில் அமைந்திருக்கிறதென்றும், சம்பாபதி கோயி லுக்குக் கிழக்கே காவிரியின் கரையோரம் அமைந்த பூவனம் மணிமேகலையிற் குறிக்கப்பட்ட பழைய உவவனமென்றும், சாய்க்காட்டினையடுத்து இக்காலத் தில் வெள்ளையனிருப்பு என வழங்கும் இடம், சிலப்பதி காரத்திற் குறிக்கப்பட்ட வால்வளைமேனி வாலியோனு கிய பலதேவன் கோயில் இருந்த இடமாகுமென்றும் கூறுகிறார். மேலும் இதனையொட்டி பல்லவனீச்சுரத் திற்குக் கிழக்கே கால் கல் அளவிலுள்ள திருமால் கோயில் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட மணி வண்ணன் கோட்டமாகும் என்றும், காவிரியின் தென் கரையில் திருவலம்புரத்திற்குக் கிழக்கேயுள்ள வாணகிரி என்ற ஊர், பத்துப்பாட்டுள் ஒன்று கியப் பட்டினப்பாலையில், “இரு காமத்தினையேரி” என்ற தொடர்க்கமைந்த உரைப் பகுதியில் நச்சினார்க் கினியர் பிற உரையாசிரியர்கள் கூறும் உரை விகற்ப

மாகக் குறித்த வளகாமரேரி வனிகாமரேரி என்னும் இரண்டனுள் வனிகாமரேரியாக இருத்தல் கூடும் என்றும் கூறுகிறார். அவ்வூரின் மேற்கிலும் திருவலம் புரத்தின் தெற்கிலும் அமைந்த சங்கஞ்சங்குளம் என்ற இடம் மேற்குறித்த உரைப்பகுதியில் நச்சினார்க்கினியர் மற்றொரு சாரார் கூற்றாகக் குறித்த சங்கிராமகாமம், வனிக்கிராம காமம் என்னும் இரண்டனுள் சங்கிராம காமம் என்ற ஏரியாக இருத்தல் கூடும் என்றும், திரு வலம்புரத்தின் வடக்கே காவிரியின் வடகரையில் உள்ள மணிக்கிராமம் என்ற ஊர் இப்புகார் நகரத்திலிருந்து வெளிநாடுகளிற் சென்று வணிகம் புரிந்த வணிகர் குழு வினர் வாழ்ந்த இடமாகும் என்றும் அவர் குறிப்பிடு கின்றார்.

ஆகவே இப்பொழுது காணப்படும் காவிரிப்பூம்பட்டி னத்தின் சுற்றுப்புற ஊர்களிலுள்ள கல்வெட்டுகளையும் ஆராய்தல் சிறப்பு என ஆராய்ந்ததில் அதிலிருந்தும் சில மறைமுகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

## பிற்காலச் சோழர் காலத்தில் புகார்

சங்ககாலச் சோழர்கள் காலத்தில் பெரு நகராகக் காட்சியளித்த காவிரிப்பூம்பட்டினம் பிற்காலச் சோழர்கள் காலத்தில் பல சிற்றூர்களாகச் சிதறி, புகழ் மங்கிப் போய்விட்டதாகத் தோன்றுகிறது.

## புகார் அழிந்த காரணம்

அதற்குக் காரணம் பலர் பல விதமாகக் கூறு கிறார்கள். கிள்ளிவளவன் தனது மகனைப் பறிகொடுத்த

துக்கத்தால் இந்திர விழா கொண்டாட மறந்தானென வும் அது பொறுக்கமாட்டாது கடல் பொங்கியெழுந்து இம் மாநகரை அழித்துவிட்டது எனவும் மணிமேகலை கூறுகிறது.

சோழ அரசன் கிள்ளிவளவனுக்குப்பின் வாழ்ந்த சோழர்கள் காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்தான் காரணமாக அமைந்திருக்க வேண்டும் என்போர் ஒரு சாரார்.

அது அன்று, சோழர் குலத்தில் தோன்றி தொண்டை நாட்டு முடிதரித்து வாழ்ந்து வந்த தொண்டையர் எனப்படும் பல்லவர்கள்தான் இந்நகர அழிவுக்கு வழி வகுத்தவர்கள் என்றிடுவர் மற்றெருரு சாரார்.

எது எவ்வாருயினும் நகர் ஓரளவேனும் அழிந்தது என்பதும் புகழ் மங்கியது என்பதும் பிற்காலத்தில் சிற்றூர்களாகச் சிதைவுண்டது என்பதும் மறைக்க முடியாத உண்மைகளாகும்.

**மறைந்த மாநகர் எங்கே?**

ஆனாலும் கடல்கொண்டு கடலுக்கு உட்பகுதியில் தான் காவிரிப்பூம்பட்டினம் இருக்கிறது என்பது ஒப்புக் கொள்ள முடியாத ஒன்று. ஏனெனில் கி. மு. மூன்றும் நூற்றுண்டு முதல் இந்நகர் பற்றிய புத்த, சைன குறிப்பேடுகளும் சங்ககால இலக்கிய ஆதாரங்களும் பிற்காலத்தியக் கல்வெட்டுகளும் தொடர்ந்து நமக்குக் கிடைத்துள்ளன. கி. பி. முதலிரண்டாம் நூற்றுண்டில் மேனுட்டாசிரியர்கள் குறிப்பும், சங்க இலக்கியங்கள்

சான்றும், கி. பி. ஐந்தாம் நூற்ருண்டில் புத்ததத்தர் குறிப்பும், ஏழாம் நூற்ருண்டில் தேவாரக்குறிப்பும் திருஞான சம்பந்தர் குறிப்பும் சோழர்கள் கால முதல் விசயநகர் மன்னர் ஆட்சி, தஞ்சை சரபோசர் ஆட்சிவரை கல்வெட்டுக் குறிப்பும் காணப்படுதலாம். இன்று சாயவனம் பல்லவனீச்சுரம் அமைந்திருக்கின்ற நிலப் பரப்பில்தான் காவிரிப்பூம்பட்டினம் மண்ணுள் மறைந்திருக்கவேண்டும் என நம்புவதற்குப் போதிய வலிவுள்ளது.

## அகழ்வாய்வு

அகழ்வாராய்ச்சியிலீடுபட்டுள்ள நடுவண் அரசின் தென்வட்ட தொல்பொருளியல் பிரிவினர் இதற்கொரு முடிவை வெகுவிரைவில் வழங்குவார்கள் என இங்நேரத்தில் நாம் அனைவரும் எதிர்பார்ப்பது; இயற்கையேயாகும்.

அவ்வாறு ஓரளவு அழிந்ததில் தப்பியதும் அதற்குப் பிறகு எழுந்ததுமான ஊர்களே இன்று காணப்படும் சாயக்காடு, பல்லவனீச்சுரம், வாணகிரி, வெள்ளையனிருப்பு, தலைச்சங்காடு, திருவலம்புரம், மேலப் பெரும்பள்ளம், கீழைப்பெரும்பள்ளம், கீழையூர், திருவெண்காடு, நாங்கூர் நெய்தல் வாசல் போன்ற சிற்றூர்கள் எனக் கொள்வதில் தவறு ஏதும் இருக்காது.

## காவிரிப் பூம்பட்டினமும் சாயக்காடும்

இன்று உள்ள சாயவனம் என்னும் ஊர் பூம்புகாரின் ஒரு பகுதிதான் என்பதற்கு சாயவனத்திலுள்ள சாயவனேஸ்வரக் கோயிலின் கல்வெட்டுகளே ஆதாரங்களாக உள்ளன.

அக்கோயிலின் பிரகார மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டொன்று இராசாதி இராச வள நாட்டைச் சார்ந்த, நாங்கூர் நாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்து திருச்சாயக்காடுடையார்க்கு, பிடாரன் நாயக்கன் என்பான் சில நிலங்களைத் தேவதானமாகக் கொடுக்க, அதை அரசன் பூந்தோட்டமாக்கி அதற்கு "இராசராசன் திருநந்தவனம்" என்ற பெயரிட்டான் என்று கூறுகிறது. இக்கல்வெட்டு, திருச்சாயக் காடுடையார் ஆலயம், காவிரிப் பூம்பட்டினத்தில்தான் இருந்தது என்பதைத் தெரிவிக்கிறது.

இக்கருத்தை மேலும் வலிவூட்டுவதாக விக்கிரம சோழன் கல்வெட்டொன்று அக்கோயிலிலே உள்ளது. அதே சுவரில் உள்ள மற்றொரு கல்வெட்டு சோழ மன்னரின் அமைச்சன் முகுந்தயரதிபதி திருச்சிற்றம் பலவன் என்பான், புகார் நகரில் உள்ள சாயவனத்தில் ஒரு மண்டபமும் எழுப்பி அவ்வூரைச் சார்ந்த ஐம்பது பிராமணர்களுக்கு உணவும் அளித்தான் என்று கூறு கிறது. இதில் சாயவனம் என்ற ஊர் புகார் நகரத்தில் இருந்தது என்பது வெள்ளிடை மலையாகக் காட்சி யளிக்கிறது.

## சாயக் காட்டுள் காவிரிப் பூம்பட்டினம்

விக்கிரமசோழன் காலம்வரை காவிரிப்பூம்பட்டின மாக வழங்கிய இவ்வூர், மாறவர்மர் சுந்தரபாண்டியன் காலத்தில் காவேரிப்பூம்பட்டினமாகிப் பின்னர் விசய நகர மன்னர்கள் காலத்தில் திருச்சாயக் காட்டூர் சீமையைச் சார்ந்த காவேரிப்பூம்பட்டண நகரத்திலுள்ள காவேரிப்பட்டணம் என வழங்கலாயிற்று.

சோழர்கள் காலத்தில் பூம்புகாரின் ஒரு பகுதியாக இருந்த சாயக்காடு விசயநகர மன்னர்கள் காலத்தில்

சாயக்காட்டூர் சீமையாக ஆகி காவேரிப்பட்டணத்தைத் தன்னுள் அடங்கிய சிற்றூர் ஆக்கிவிட்டது. இச்சாயக் காடு என்னும் பெயர் ஊருக்காகி, அதுவே பின்னர் இறைவனுக்கானதா அல்லது இறைவனுக்கிருந்து ஊருக்கானதா என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று.

## கோயிற் சிறப்பு

முக்கிய சிவத்தலங்கட்கும் வைணவத் தலங்கட்கும் வரையாது வழங்கி வந்த சோழ மன்னர்கள் இக் காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள கோயிலை முக்கியமாகக் கருத வில்லை போலும். ஏனெனில் அங்கு காணப்படும் கல் வெட்டுகளிலிருந்து இக்கோயிலுக்குக் கொடையளித் தவர்கள் அரச அதிகாரிகளும் சாதாரண நிலையிலுள்ள வர்களும்தான் என்பது நன்கு தெரிகிறது.

## கோயிலின் வறிய நிலை

முன்னுள் குலோத்துங்க சோழன் காலத்தில் இக் கோயில் நிலங்களிலே ஒரு பகுதியையும் கோயிலுக்குச் சொந்தமான மனையையும் வல்லம் என்ற ஊரில் உள்ள உத்தராபதி நாயக்கன் என்ற திருச் சாயக்காட்டு வேளாளனுக்கு குத்தகைக்கு விட்டு, நாள் ஒன்றுக்கு "சாயவன நாழி" என்ற அளவையால் எட்டு சாயவன நாழி மிளகு வழங்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து அக்கோயில் எவ்வளவு வறிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்பது நன்ருகப் புரிகிறது.

## பாதுகாப்புப் பிரிவு

திருக்கடையூர் கல்வெட்டொன்றும் வீட்டு மனை களும், தோட்டமும் அமைப்பதற்கு அரசன் சில நிலங்

களைக் கொடையாக அளித்தான் என்று கூறுவதோடு அக்கோயிலிலுள்ள அணிகலன்களையும் பாத்திரங்களை யும் பாதுகாக்க காவிரிப்பூம்பட்டினத்து மக்களைப் பொறுப்பாக ஆக்கினுன் எனவும் கூறுகிறது. இது போன்று கோயில் உடைமைகளையும் கோயிற் சாசனங் களையும் பாதுகாக்கும்படி நகரத்தாரிடமும் படையின ரிடமும் ஒப்படைக்கப் பட்டிருந்ததைப் பிற கல்வெட்டு களால் காணலாம்.

## அரசு அதிகாரிகள்

அதுவுமல்லாமல் காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்து பலர், அரசில் மிக, முக்கியமான பதவியைப் பெற்றிருந் தார்களென்பதைத் தஞ்சை அரசர் சரபோஜி காலத்திய செம்பனுர் கோயில் கல்வெட்டின் மூலம் உணர முடி கிறது. அக்கல்வெட்டு இரண்டு அதிகாரிகளைக் குறிக் கிறது. அதில் ஒருவர் காவேரிப்பட்டணத்தைச் சார்ந்த "சுப்பா அய்யாவய்யன்" என்பவராவர்.

## தலைச்சங்காடு

அடுத்து தலைச்சங்காட்டைப்பற்றிக் கூறும் கல் வெட்டுகளை இங்கே காணலாம். பொதுவாக இக்கல் வெட்டுகளி லிருந்து இப்பொழுது வழங்கப்பெறும் தலைச்சங்காடு, திருவலம்புரம், மேலப்பெரும்பள்ளம் ஆகிய மூன்று ஊர்களும் சோழர்கள் காலத்தில் ஒரே ஊராக அமைந்திருந்தன எனத் தெரியவருகிறது.

மேலப்பெரும்பள்ளத்தில் உள்ள தட்சண ஈஸ்வரர் கோயிலின் வடக்குச் சுவரில் காணப்படும் கல்வெட் டொன்று இராசாதி இராச வளநாட்டைச் சார்ந்த நாங்கூர் நாட்டிலுள்ள பெருஞ்சிறை நல்லூரின் மகா

சபை, மூன்றரை வேலி நிலத்தை வரி நீக்கி இராச நாராயண வளநாட்டைச் சார்ந்த ஆக்கூர் நாட்டிலுள்ள தலைச்சங்காட்டின் திருவலம்புரமுடையார் : கோயிலுக்கு 40 காசுக்கு விற்றதாகக் கூறுகிறது.

இக்கல்வெட்டி லிருந்து திருவலம்புர முடையார் இருக்கின்ற இடம்தான் திருவலம்புரமாக இருந்திருக்க வேண்டுமென்றும் அது இப்பொழுது மேலப் பெரும் பள்ளம் என்ற ஊரில் இருக்கின்ற தென்றும் அம்மேலப் பெரும்பள்ளமும் தலைச்சங்காட்டின் ஒரு பகுதியாகத் தான் இருந்திருக்க வேண்டுமென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால் இவை ஒவ்வொன்றும் சிறு சிறு ஊராகப் பிரிந்து நிற்கின்றன.

### மகாசபை

இத் தலைச்சங்காட்டிலே மகாசபை ஒன்று இருந்த தாகவும் அது இராசஇராச சோழனின் பெயரால் திருச் சித்திரக் கூடத்தாழ்வார் கோயிலில் உள்ள பத்து பிராமணர்களுக்கு உணவு அளித்ததாகவும் அக் கோயிலில் உள்ள இறைவனுக்கு 'ஹவிர பலி அர்ச்சனை' நடத்தியதாகவும் கூறுகிறது.

### பிற கோயில்கள்

இக்கல்வெட்டில் கூறப்படும். திருச்சித்திரக் கூடத் தாழ்வாரைத்தவிர திருவாய்ப்பாடி ஆழ்வார் என்ற கோயி லும், பெருந்திருக் கோயிலுடைய நாயனர் கோயிலும், திருவேள்விக்குடி நாயனர் கோயிலும் இருந்ததாகவும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

## திருவலம்புரம் உடையார் கோயில்

மேலப் பெரும்பள்ளத்திலே இன்று உள்ள தட்சண புரீஸ்வரர் கோயில்தான் கல்வெட்டுகளிலே காணப் படும் தலைச்சங்காட்டில் உள்ள திருவலம்புரம் உடையார் கோயில். இக்கோயிலுக்கு ஆடவரும் மகளிரும் தங்களை விற்றுக் கொண்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## மக்கள் விற்பனை

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டு, நம்ப நம்பிகாடுகொள் நங்கை என்பாளும், அவளுடைய மகளும் பேரனும், அவனது குழந்தைகளும் மற்றவர்களும் தங்களை முப்பது காசுக்கு விற்றுக கொண்டார்கள் என்று தெரிவிக்கிறது. அதே போன்று நாங்கூர் எனும் ஸ்ரீபாததூளி சதுர்வேதி மங்கலம் என்ற ஊரின் சோமன்தத்தன் என்பான் அறுவரை விற்றதைப் பற்றி மற்றொரு கல்வெட்டு கூறுகிறது.



# கங்கை கொண்ட சோழீச்சுரர் கோயில்

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் கூழம்பந்தல் என்று ஒரு சிற்றூர் உள்ளது. இது இப்பொழுது காஞ்சியிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவில், வந்தவாசிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

## திருக்கோயிலின் இடம்

இவ்வூரின் வடகிழக்குப் பகுதியில் இன்று கம்பீரமாகக் காட்சி யளித்துக் கொண்டிருப்பதுதான் கங்கை கொண்ட சோழீச்சுரம் என்று பெயர் பெற்ற திருக்கோயிலாகும். இக்கோயில், தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையால் பழுது பார்க்கப் பட்டு, பாதுகாத்து வரப்படுகிறது.

கூழம்பந்தலிலிருந்து வடக்கே எட்டு கிலோ மீட்டர் தொலைவில் புகழ் பெற்ற மாமண்டூர் கல்வெட்டு உள்ளது.

### கோயிலின் அமைப்பு

கங்கை கொண்ட சோழீச்சுரம் முற்காலச் சோழர் கலைப்பாணியைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளது. உருவத்தில் மாவீரன் இராஜேந்திரனின் புகழுக்கேற்பப் பெரியதாய்க் காணப்படுகிறது. மூன்று தளங்களையும் வட்ட வடிவ சிகரத்தையும் தாங்கி நிற்கும் உண்ணாழியும், அதை அடுத்து அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண் டபம் ஆகியவையும் சோழர் கலைப்பாணிக்கே உரிய வகையில் எடுப்பாக விளங்குகின்றன.

### வாயிற் காப்போர்

மகாமண்டபத்தினுள்ளே செல்ல கிழக்குப் பக்கம் ஒரு வாயிலும், தெற்குப் பக்கம் ஒரு வாயிலும் உள்ளன. இரு வாயில்களின் இருபக்கங்களிலும் வாயிற் காப் போர் உருவச்சிலைகள் இருந்தன என்பதற்கு இப் பொழுது தெற்குப் பக்க வாசலில் (வலதுப் பக்கம்) எடுப்பாக நிற்கும் வாயிற்காப்போர் சிலையைக் கொண்டே ஊகிக்க முடியும்.

“பக்தர்களே! உள்ளே செல்லுங்கள்; பரமன் உள்ளே உள்ளான்!”

என்று கூறும் வகையில் தனது வலது கையை உயர்த்தி உள்ளே செல்லச் சொல்லும் நிலையில் அச் சிலை அமைந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி யளிக்கக் கூடியதாய் உள்ளது.

### நாடக சாலை

மகாமண்டபத்தை அடுத்து, திருச்சுற்று மதில் காணப்படுகிறது. அதை அடுத்து, நல்ல வழ

வழப்பான, கடைந்தெடுத்தாற் போன்ற தூண்களால் தாங்கி நிற்கக் கூடிய ஒரு நாடகசாலை இருந்ததற் கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இப்பொழுதும் ஏழு பெரும் தூண்கள் நின்ற வண்ணமும், சில விழுந்து கிடக்கும் நிலையிலும் காட்சி யளிக்கின்றன.

## மாடங்கள்

உண்ணாழி, அர்த்த மண்டபம் ஆகியவற்றின் வெளிப் பக்கச் சுவர்களிலுள்ள மாடங்களில் இறை வனின் திருவுருவங்கள் சோழர் பாணியில் காணப்படு கின்றன. உண்ணாழியின் தெற்குச் சுவரில் சடைமுடி அண்ணலாய், ஆலின் கீழ் அமர்ந்து அறம் உரைக்கும் எம்மானின் திருவுருவமும், பிட்சாடனரின் திருவுரு வமும், அர்த்தமண்டபத்தின் தெற்குச்சுவரில் விநாய கரின் உருவமும் காணப்படுகின்றன.

## லிங்கோத்பவர்

உண்ணாழியின் மேற்குச் சுவரில் பரமனின் அடியை யும் முடியையும், திருமால் வராக உருவிலும் பிரமன் அன்னப் பறவை வடிவிலும் தேடுவதை மேலே சித்தரித்துக் காட்டும் லிங்கோத்பவரின் உருவம் எழிலாக அமைந்துள்ளது. இது சோழர் காலக் கட்டடக் கலையைப் பறைசாற்றுகிறது. லிங்கோத் பவரின் வலது பக்கத்தில் நான் முகனின் உருவம் நின்ற நிலையில் காணப்படுகிறது. இடது பக்கத்தில் சூரியன் நின்ற நிலையில் இருகரங்களிலும் தாமரை மலர்களைத் தாங்கிப் பிடித்த வண்ணம் காட்சி தருகிறான்.

## வேதநாயகனும் கொற்றவையும்

உண்ணாழியின் வடக்குச் சுவரில் வேதநாயகனும் அர்த்த மண்டபத்தின் வடக்குச் சுவரில் கொற்றவை யும் காட்சி அளிக்கின்றனர். மகிஷாசுரனின் தலைமீது நின்ற நிலையில் உள்ள கொற்றவை எழிலார்ந்த உருவ மாக விளங்குகிறது.

## விமானம்

உண்ணாழியின் மேலே உள்ள தளங்களில் நான்கு பக்கங்களிலும் கூடுகள், சாலைகள் அணி செய்கின்றன. ஒவ்வொரு சாலையிலும் இறைவனின் பல்வேறுபட்ட உருவங்கள் காணப்படுகின்றன. கிரீவத்தில் நான்கு பக்கங்களிலும், மாடங்கள், அம்மாடங்களைத் தாங்கி நிற்கும் தூண்கள் பல்லவர் காலக் கட்டடக் கலை யிலிருந்து சோழர் காலக் கட்டடக்கலைக்கு மாறும் மாற்ற நிலையை எடுத்து இயம்புவதாக உள்ளன.

அடிப்பகுதி வட்டமாகவும் மேற்பகுதி எண்பட்டை வடிவிலும் தூணின் மேல் தாமரை மலர் விரிந்த நிலையில் உள்ள பலகை அமைந்திருப்பதும், இன்னும் பல்லவர் காலக் கட்டடக் கலையிலிருந்து அக்கால மக்களால் விடு பட இயலவில்லை என்பதைத் தெள்ளெனத் தெரிவிக் கிறது. இரண்டாம் தளத்தில் நான்கு மூலைகளிலும் நந்திகள் கால்களை மடித்துக் கொண்டு படுத்துள்ள பாங்கு வியக்கத்தக்கதாக உள்ளன.

கோயிற் சிகரம் வட்ட வடிவில் உள்ளது. உட் பகுதி செங்கல்லால் கட்டப்பட்டு, மேற்பகுதி கருங் கல்லினுல் பாவப்பட்டு காணப்படுகிறது. சிகரத்தின் மேலே இருந்த கலசம் இப்போது காணப்படவில்லை.

## கல்வெட்டுகள்

கோயிலின் சுவர்களில் வெளிப்பக்கத்தில் மூன்று முழுக் கல்வெட்டுகளையும் சில உடைப்பட்ட கல் வெட்டுகளையும் காணலாம். ஒரு கல்வெட்டு முதலாம் இராஜேந்திரனின் இருபத்திரண்டாம் ஆட்சி ஆண்டி லும் (கி. பி. 1036), ஒரு கல்வெட்டு இம்மன்னனின் மகனுன முதலாம் இராஜாதிராஜனின் முப்பத்து மூன்ரும் ஆட்சி ஆண்டிலும் (கி. பி. 1051) பொறிக்கப் பெற்றுள்ளன.

மற்ருெரு கல்வெட்டு, "கோமேரின்மை கொண் டான்" என்று ஆரம்பிக்கிறது. இதுவும் முதலாம் இராஜேந்திரனின் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் எழுதப் பெற்றிருக்க வேண்டும். மேலே குறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டதுதான் காலத்தால் முந்திய கல்வெட்டாகும். அதிலும் குறிப்பாக இந்தக் கல்வெட்டுதான் இக்கோயில் யாரால் கட்டப் பெற்றது என்பதைத் தெளிவாக்குகிறது.

## கட்டியது யார்?

முதலாம் இராஜேந்திரனின் குருவான "ஈசான பண்டிதர் காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டுக் கங்கை கொண்ட சோழபுரத்து எடுப்பித்தத் திருக் கற்றளி ஈசுவரமுடைய மகாதேவர்" என்று தெளி வாகக் கூறுகிறது.

## கொடை

அவ்வாறு எடுப்பித்த அக் கோயிலுக்கு ஜெயங் கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க்கோட்டத்துப் புலிவல நாட்டு ஆதுவபாக்கத்தில் வெள்ளான் வகையாக

விளங்கும் நிலங்களில் காணிக் கடஞுக மன்ன னுக்குச் செலுத்தப்பட வேண்டிய நெல் இரண் டாயிரத்து இருநூற்றைம்பதின் கலத்தையும் பொன் அறுபத்தைங் கழஞ்சையும் வரியிலிட்டுக் கொடுத் தமையை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

## இராஜேந்திரனின் கல்வெட்டு

முதலாம் ராஜேந்திரனின் 22-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு, கங்கை கொண்ட சோழ ஈசுவரமுடை யாருக்கு ஆக்கூரார் நிலம் விற்றுக் கொடுத்ததைக் குறிக்கிறது.

## இராஜாதிராஜனின் கல்வெட்டு

முதலாம் இராஜாதிராஜனின் முப்பத்துமூன்றும் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, கங்கை கொண்ட சோழ ஈசுவரமுடையாருக்கு ஸ்ரீ ராஜாதிராஜதேவர் குரு தேவர் அதிகாரிகள் பராசர்யந் வாசுதேவ நாராயணஞன உலகளந்த சோழப் பிரம ராயன், திருநந்தா விளக்கு ஒன்று அமைத்து, அது எரிப்பதற்கு நெய் வழங்குவதற்காகச் சாவா மூவாப் பேராடு தொண்ணூறும், சுவாமிக்குத் திருவந்திக் காப்புக்காக ஐங்கழஞ்சு பொன்னும் அக்கோயில் சிவ பிராமணர்கள் கையில் அளித்து முட்டாமல் அட்டி வரச் செய்ததைக் குறிக்கிறது.

முன்னரே கூறியது போன்று மற்றும் சில உடைந்த கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. அவை களிலிருந்து யாதொரு செய்தியும் அறிந்து கொள்ள இயலவில்லை.

## ஊரின் பெயர்

கூழம்பந்தல் என்று இப்பொழுது வழங்கப் பெறும் இப்பெயர் எவ்வாறு எப்பொழுது ஏற்பட்டது என்று அறிய முடியவில்லை. முதலாம் இராஜேந்திர னது பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டுக் காலத்துக் கல் வெட்டில் இவ்வூர் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்று அழைக்கப்படுகிறது. இம்மன்னனின் இருபத்திரண் டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டிலும், இவனது அருமை மைந்தன் முதலாம் இராஜாதிராஜனுடைய முப்பத்து மூன்றாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளி லும் 'விக்கிரம சோழபுரம்' என்று வழங்கப்படுகிறது. அத்தோடு இவ்வூர் வணிகர்கள் வாழ்ந்து வந்த இடம் என்பதை 'நகரம்' என்ற சொல்லினால் சுட்டிக் காட்டப் படுகிறது. இவ்வூர் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டில் அமைந் திருந்தது என்பதையும் கல்வெட்டுகள் மூலம் உணர முடிகிறது.

## வரிகள்

இக்கோயிலில் காணப் பெறும் கல்வெட்டுகள் மூலம் அக்காலத்தில் இப்பகுதியில் வழக்கில் இருந்த சில வரிகளின் பெயர்களையும் அளவுகோலையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

உழவிறை, எச்சோறு, கூற்று நெல், வெட்டி, அமஞ்சி ஆகிய வரிகளின் பெயர்கள் காணப் படுகின்றன. உழவுத் தொழிலின்மீது விதிக்கப்படும் வரிக்கு 'உழவிறை' என்றும், நிலங்களைக் கூறு செய்யும் அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் சோற்றுக்கு 'எச்சோறு' என்றும், நிலங்களைக் கண்காணித்து வரு

வதற்காக வசூலிக்கப்படும் வரிக்கு 'வெட்டி' என்றும், நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்காக வசூலிக்கப்படும் வரிக்கு 'அமஞ்சி' என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளன. நிலங்கள் பதினாறுசாண் கோலால் அளந்து பிரிக்கப் பட்டது என்று தெரிகிறது.

## மன்னனின் ஆணை

முதலாம் இராஜேந்திரனின் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு அம்மன்னன் எங்கிருந்து கொண்டு ஆணைப்பிறப்பித்தான் என்பதையும் அவன் ஆணையிடு கையில் எங்தெந்த அதிகாரிகள் உடனிருந்தார்கள் என்பதையும் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

"நாம் முடி கொண்ட சோழபுரத்து நம் வீட்டின் உள்ளால் நீராடுமிடத்து நாம் தானஞ்செய்யாவிருந்து"

என்ற தொடர் வருவதால் அரசன், இன்று பழை யாறை என்று வழங்கப்படும் முடிகொண்ட சோழபுரத் தில் இருந்த தனது மாளிகையில் இருந்து ஆணைப் பிறப் பித்தான் என்பதை உணர முடிகிறது. தான் கொடுத்த தானம் "ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புலிவல நாட்டு நாட்டார்க்கும் பிரமதேயக் கிழவர்க்கும் தேவஸ் தானப் பள்ளி சந்த, கணிமுற்றூட்டு, வெட்டப் பெற்று பழவறச் சாலாபோகம் உள்ளிட்ட ஊர் களிலார்க்கும் நகரங்களிலார்க்கும்" தெரியப்படுத்த வேண்டும் என்பதையும் மன்னன் கூறியுள்ளான்.

## அதிகாரிகள்

முதல் இராஜேந்திரன் காலத்தில் இருந்த அதிகாரி களில் சிலரை இங்குள்ள கல்வெட்டு குறிக்கிறது.

**ஓலை எழுதும் :**

மஹிபால குல காலன்

**ஓலை நாயகன் :**

உத்தமச்சோழ பல்லவராயன்

முடிகொண்ட சோழ விழுப்பரையன்

விக்கிரம சோழச் சோழியவரையன்

இராஜராஜ பிரம்மாராயன்

**ஒப்பிட்டுப் புகுந்த அதிகாரி :**

ஜனநாதனுன ராஜேந்திர சோழ பிரமாதிராஜன்.

**உடன் கூட்டத்து கருமம் ஆராய்பவர்கள் :**

உதயதிவாகரன் தியான ராஜராஜ மூவேந்த வேளான்.

சூற்றியான சோழ வேளான்

**நடுவிலிருக்கும் :**

சதாசிவப்பட்ட ஸோமயாஜி

பரமேசுவரபட்டர்.

**கருமர் ஆராய்பவர் :**

மாணிக்கன் எடுத்த பாதமான சோழ மூவேந்த வேளான்.

**புரவுவரி திணைக்களத்துக் கன்காணி :**

பெரும் பேற் கிழான் பட்டன் வாசுதேவன்

சீகண்டன் சேந்தன்

**புரவுவரி திணைக்களம் :**

பொன்னன் கொண்டையன்

சிறுகுடையாங் அடிகள் திருமணி

ஆலங்குளவன் ஆதித்தன்

சூலபாணி அருமொழி

**வரிப்பொத்தகம் :**

கிழான் அரங்கன் வீதிவிடங்கன்

**முகவெட்டி :**

சங்கர ஙந்திபட்டன்

ஐயாறன் தேவர் கண்டன்

நெற்குன்றங்குழான் காமன் சந்திரசேகரன் வேளான் பெருமான்.

**வரிப்பொத்தக் கணக்கு :**

சானகிராமன் கேசவன்.

**வரியிலி :**

சூரன் ஐயாறன்

சூற்றி பட்டாலகன்.


**கீழ்முக வெட்டு :**

பட்டன் மாசறுசோதி

நாராயண பட்டன்.

**கண்காணி :**

பொற்காடன் மதுராந்தகனுன ராஜ ராஜ மார்த்தாண்ட மூவேந்த வேளான்.



# கழுகுமலை வெட்டுவான் கோயில்

## குடைவரைக் கோயில்கள் தோற்றம்

தமிழகத்தில் குடைவரைக் கோயில்கள் கி. பி. 580 முதல் 630வரை அரசாண்ட பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்திலிருந்துதான் ஆரம்பமாயிற்று என்று ஒரு சில ஆண்டுகளுக்கு முன்புவரை கூறி வந்தனர் ஆராய்ச்சியாளர்கள்.

அதற்கு ஆதாரமாக அம் மன்னனின் மண்டகப் பட்டு கல்வெட்டை எடுத்துக் காட்டுவர்.

பின்னாளில் அக்கொள்கை மாற்றப்பட வேண்டிய தாயிற்று.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநராக இருந்துவரும் திரு. இரா. நாகசாமி அவர்கள், "தமிழகத்தில் குடைவரைக் கோயில்கள் கி. பி.

ஐந்தாம் நூற்றுண்டிலிருந்தே ஆரம்பமாகிவிட்டது என்று கூறினுர்கள். அதற்கு ஆதாரமாகப் பிள்ளையார் பட்டியில் காணப்பெறும் குகைக் கோயிலின் அமைப்பை எடுத்துக் காட்டினுர்.

எனவே அந்நாள் தொட்டுக் குடைவரைக் கோயில் களை உருவாக்கும் பண்பு தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்று உறுதியாக நம்பலாம்.

## தொண்டை மண்டலத்தில்

கி. பி. ஏழாம் நூற்றுண்டி லிருந்து தொண்டை மண்டலத்தில் ஏராளமான குடைவரைக் கோயில்கள் எழுப்பிக்கப் பெற்றுள்ளன.

உதாரணமாகப் பனைமலை, வல்லம், மாமண்டூர், பல்லாவரம் ஆகியவைகளைக் கூறலாம். அதுதொட்டு தமிழகத்தில், குடைவரைக் கோயில்களை உருவாக்கும் பண்பு எங்கணும் தொடர்ந்து பரவ ஆரம்பித்தது. பல்லவ மன்னன் மகேந்திர வர்மனின் பணி மட்டும் திருச்சிவரை பரவியது.

## சித்தன்ன வாசல்

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை சித்தன்ன வாசல் குகைக்கோயில்கூட மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்தது என்று கூறப்பட்டது. ஆனுல் இப்பொழுது அது பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் காலத் தது என்று அறுதியிட்டுக் கூறப்படுகிறது.

### ஜடிலவர்மனது பணி

அதற்கு ஆதாரமாக அங்கு காணப் பெறும் பாண்டிய மன்னனின் கல்வெட்டு கூறப்படுகிறது. இம்மன்னனுடைய தந்தையான ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையன் காலத்திலும் தமிழகத்தின் தென் பகுதியில் பல குடைவரைக் கோயில்கள் உருவாக்கப் பெற்றன. அவனது பணிக்கு எடுத்துக்காட்டாக ஆனைமலைக் குடைவரைக்கோயில், திருப்பரங்குன்றம் குடைவரைக்கோயில், கழுகுமலைக் குடைவரைக்கோயில் ஆகியவைகளைக் கூறலாம்.

### வெட்டுவான் கோயிலின் காலம்

கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயிலும் இம்மன்னனது காலத்தைச் சார்ந்ததாகத்தான் கருத வேண்டும். கோயிலின் அமைப்பைக் காணும்போது, மாமல்லையில் காணப்பெறும் தர்மராஜ ரதத்தை ஒத்து காணப்படுகிறது. ஆனால் வெட்டுவான் கோயிலில் உள்ள சிற்ப வேலைப்பாடுகளை நோக்கின் தர்ம ராஜ ரதத்தில் காணும் சிற்பங்களைவிடச் சிறிது வளர்ச்சி யடைந்த நிலையில் உள்ளது. எனவே கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று இதைக் கூறலாம்.

### தமிழகத்தில் இது ஒன்றே

திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியி லிருந்து தென்மேற்கே சுமார் 21 கிலோ மீட்டர் தொலை வில் அமைந்திருக்கும் கழுகுமலை எனும் சிறுநகரத்தில் இவ்வெட்டுவான் கோயில் உள்ளது. கிழக்குப் பார்த்த

வண்ணம் பெரும் மலையில் ஒரு பகுதியைக் குடைந்து உருவாக்கப் பெற்றுள்ளது. பெரு மலையில் ஒரு பகுதியைக் குடைந்து கோயிலாக உருவாக்கப்பெற்றது இது ஒன்றுதான் தமிழகத்தில் உள்ளது.

மாமல்லையில் காணப்படுபவை அனைத்தும் தனித் தனி சிறு குன்றுகளைக் குடைந்து உருவாக்கப் பெற்றவை. ஆனால் வெட்டுவான் கோயிலைப் போன்று உருவாக்கப்பெற்ற கைலாசநாதர்கோயில் எல்லோராவில் காணப்படுகிறது. இக்கோயில் இராட்டிரகூட மன்னன் முதலாம் கிருஷ்ணனால் (கி. பி. 756-775) உருவாக்கப் பெற்றது. அதன் காரணத்தாலும் வெட்டுவான் கோயில் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது என்று கூறமுடிகிறது.

## உருவாக்கும் தன்மை

குடைவரைக் கோயில்கள் மேற் பகுதியிலிருந்து தான் குடைய ஆரம்பித்து முடித்திருக்க வேண்டும் என்பதும் இக்கோயிலைக் காண்கையில் நன்கு தெரிகிறது.

சிகரப்பகுதி, இரண்டாம் நிலை, முதலாம் நிலை, அவைகளில் காணப் பெறும் சிற்பங்கள் பூவேலைப் பாடுகள் ஆகியன யாவும் நன்கு செதுக்கப் பெற்றுள்ளன. ஆனால் கோயிலின் அடிப்பகுதி நன்கு செதுக்கப்படாமல், வேலை முடிவுறாமல் அரை குறைப் பணியோடு நிற்கிறது. அதற்கும் எத்தகைய இடர்ப்பாடு வந்துற்றதோ. துயரம் தொண்டையை அடைக்கிறது. அவ்வளவு அருமையான வேலைப்பாடுகள். காண்போர் மனத்தைக் கலங்கச் செய்கிறது.

## செவி வழிச் செய்தி

இது பற்றிய கதை ஒன்று இப்பொழுது கூறப் படுகிறது. இக்கோயிலின் அருகே, மலைச் சரிவில் சமணச் சிற்பங்களை, ஒரு சிற்பி செதுக்கிக் கொண்டு இருந்தாராம். அவருடைய மகன், தந்தைக்குத் தெரியாது இக்கோயிலை உருவாக்கி வந்தானும். தந்தை தனது உளியை அடிக்கும் நேரமும், மகன் தனது உளியை அடிக்கும் நேரமும் ஒரே நேரமாக இருந்து வந்ததால் தந்தையால் மகன் ஆற்றும் பணியைக் கவனிக்க முடியவில்லையாம்.

ஒரு நாள் தந்தை உளியை அடிக்கும் நேரமும், மகன் உளியை அடிக்கும் நேரமும் சிறிது மாறுபடவே, ஏதோ ஒரு வேற்று சத்தம் கேட்கிறதே என்று உணர்ந்த தந்தை சுற்றிலும் சென்று பார்க்கவே, மகன் தனக்குத் தெரியாமல் பெருங்கோயிலை உரு வாக்கும் பணியில் ஈடுபட்டு இருப்பதைக் கண்டு, ஆத்திரங்கொண்டு, ஒரே வெட்டாக மகனை வெட்டி விட்டாராம். அதுமுதல் இக்கோயிலுக்கு வெட்டுவான் கோயில் என்று பெயர் ஏற்பட்டதென்பர்.

## உண்ணாழியின் அமைப்பு

உண்ணாழியையும், முன் மண்டபத்தையுமே பெற் றுள்ள இக்கோயில் மூலவராக இலிங்கத்தைப் பெற் றிருந்திருக்க வேண்டும். இப்பொழுது காணப்பெற வில்லை. அதற்கு மாருகப் பிற்காலத்தில் விநாயகர் சிலை அங்கு வைக்கப்பெற்றது. பெரும்பாலான குடைவரைக் கோயில்களில், உண்ணாழியின் மேற்குச் சுவரில் காணப்

பெறும் சோமாஸ்கந்தர் புடைச் சிற்பமும் இக்கோயிலில் காண முடியவில்லை. அது காணுத நிலையும் இக் கோயிலைப் பற்றிய காலக் கணிப்புக்கு உதவியாக உள்ளது.

உண்ணுழியின்மீது இரண்டு விமானமும், உச்சியில் எண்பட்டைச் சிகரமும் உள்ளது. சிகரத்தின் உச்சியில் தாமரை மலர் விரிந்த நிலையில் செதுக்கப்பட்டிருப்பது காண்போர் மனத்தைச் சுண்டி இழுப்பதாக உள்ளது. தாமரையின் எட்டுப் பட்டைகளிலும் எட்டு மலர்ச் சரங்கள் தொங்கவிடப்பட்டுள்ளதாய் செதுக்கப் பெற் றுள்ளன. அவைகளின் அழகையும் நேர்த்தியையும் பார்க்கையில் அதைச் செதுக்கிய சிற்பிகளின் தொழில் திறனை வாயாரப் புகழாமல் இருக்க முடியாது.

இரண்டாம் நிலையின் மேற்பகுதியில் யாளிகள் வரிசையாக ஒன்ருேடு ஒன்றைப் பார்த்த வண்ணமும், திசை திரும்பியும் அமைந்து இரண்டாம் நிலைக்கு அழகு செய்கின்றன. இத்தளத்தின் நான்கு மூலைகளிலும், கால் களை மடக்கித் தலைகளைத் தூக்கிப் பார்த்த வண்ணம் படுத்திருக்கும் காளைகளின் காட்சி, பல்லவர் கால காளைச் சிற்பங்களை நினைவுபடுத்துகின்றன.

## சிற்பச் சிறப்பு

இத்தளத்தின் தெற்குப் பக்கத்தில் சடைகள் பல திக்குகளிலும் பரந்த வண்ணமாய்த் தட்சிணுமூர்த்தி அமர்ந்துள்ளார்.

மேற்குப் பக்கம் காணப்பெறும் நரசிம்மர் மிகுந்த கோபாவேசத்துடன் காணப்பெறுகிறுர்.

வடக்குப் பக்கம் உள்ள பிரமன் நான்கு தலைகளுடன் அமர்ந்த நிலையில் உள்ளார். கீழ்ப்புறம் அம்மையும் அப்பனும் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிப்பது அளவிட்டுக் கூற வொண்ணு அழகின் காட்சியாக உள்ளது. சிவன், பக்தர்களுக்குப் பாது காவல் அளிக்கும் நிலையிலும், உமா, இடப் புறம் அமர்ந்து தன் இதயநாதனை இமை கொட்டாமல் பார்க்கும் வண்ணமும் அமர்ந்திருப்பது எவ்வளவு இயற்கையாக உள்ளது.

## அறமுரைக்கும் அண்ணல்

முதல் நிலையிலும், தெற்குப் பக்கமும் தட்சணு மூர்த்தி அமர்ந்த நிலையில் காணப்படுகிருர். பிற இடங்களிலெல்லாம் பெரும்பாலும் ஆலின்கீழ் அமர்ந்தவராய், முனிவர்களுக்கு அறமுரைத்தவராய்க் காட்சி தருவார். இங்கு தனியராக, இடது கீழ்க்கையை இடது துடையில் ஊன்றியவராய், இடதுகாலை ஆசனத்தின் கீழே தொங்கவிட்டவராய், அமர்ந்த நிலையோடு வலது மேல் கையில் பாயும் மானுடன் காட்சி தரும் இவர், குமிழ்ச் சிரிப்பும், குளிர்ப் பார்வையும் முகத்திலே தவழ அருளே உருவாய் அமர்ந்திருக்கும் அழகே அழகு.

## திருமால் பெருமை

சிவன் கோயிலில் மேற்குப் பக்கத்தில் திருமால் உருவம் அமைந்திருப்பது கோயில் கலையின் முற்காலத்தியப் பழக்கம். பின்னுளில்தான் சிவன் கோயிலின் மேற்குப் பக்கத்தில் லிங்கோத்பவரை அமைப்பது வழக்கமாயிற்று.

எடுத்துக்காட்டாக இக் குடைவரைக் கோயிலின் மேற்குப் பக்கம் முதல் நிலையில் திருமாலும் மூன்றும் நிலையில் நரசிம்மரும் காட்சியளிக்கின்றனர். இன்னொரு சிறப்பு அம்சம் என்னவெனில் திருமாலின் இரு பக்கங் களிலும் சூரியன், சந்திரன் ஆகிய இருவரும் அமர்ந்த கோலத்தில் காட்சி அருளுவதேயாகும்.

### நாட்டிய மகளிர்

முதல்நிலை, இரண்டாம்நிலை ஆகிய எல்லா நிலையி லும் நடன மாதர்களின் உருவச் சிலைகள் நன்கு செதுக்கப் பெற்றுள்ளன. முதல்நிலையில் பூதகணங்கள், பலவகை இசைக்கருவிகளை இசைக்கும் வண்ணம் சித்திரித்திருப்பது இக்கோயிலிலுள்ள மற்றொரு இன்றி யமையாச் சிறப்பம்சமாகும்.

### சமணப் பெரியார்களின் சிற்பங்கள்

இக்கோயில் குடையப்பட்டு உள்ள அதே மலையில் தென்புறத்தில் மலைச்சரிவில் சமண முனிவர்களின் உருவங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு சிலையின் மீதும் முக்குடை காணப்படுகிறது. அறுபதுக் கும் மேற்பட்ட சிற்பங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு சிற்பத்துக்கும் கீழே, அச்சிலை யாரால் அமைக்கப்பெற்றது என்பது குறிக்கப் பெற்றுள்ளது.

### மன்னரின் உருவமா ?

ஒரு சிலை அளவிலே பெரிதாய், மாடத்தினுள்ளே அமர்ந்திருப்பதாகச் செதுக்கப் பெற்றுள்ளது. மேலே

முக்குடை காணப்படுகிறது. முக்குடையின் மேலே மிகவும் நேர்த்தியான பூ வேலைப்பாட்டைக் காண முடிகிறது. அவ்வுருவத்தின் கீழேயும் இரண்டு முனிவர்களின் உருவங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. அவைகளின் பக்கத்தில் முடி தரித்த ஆண் உருவம் ஒன்று முட்டியிட்டு வணங்கும் தன்மையில் செதுக்கப் பெற்றுள்ளது. இவ்வுருவம் அப்பொழுது ஆட்சி புரிந்த மன்னனது உருவமாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

### காழ்ப்பற்ற நிலை

இம் முனிவர்களின் சிலைகளுக்குப் பக்கத்திலேயும் இந்துக் கடவுளர்களின் உருவங்களையும் காண முடிகிறது. இவைகளைக் கொண்டும், பக்கத்திலே வெட்டுவான் கோயில் காணப்படுவதாலும், மலையின் தென் புறத்தில் முருகன் குடி கொண்டுள்ள குகைக்கோயில் காணப்படுவதாலும், அக்காலத்தில் மக்கள், சமயக் காழ்ப்பு இன்றி எல்லோரும் ஓரினத்தவராய், அமைதியாய் வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

### முருகப் பெருமான் திருக் கோயில்

இம்மலையின் தென்பக்கத்தில் குடைவரைக் கோயிலினுள்ளே நின்ற நிலையில் காட்சிதரும் முருகப் பெருமான் ஒரு தலையுடனும் ஆறு கைகளுடனும் காட்சி தருகிறார். இக்கோயில், முன்னர் கூறியவாறு கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இவ்வூர் முருகன் இப்பொழுது கழுகாசல மூர்த்தி என்று அழைக்கப்படுகிறார்.

இராமாயண காதையில் புகழ்ந்துரைக்கப்பெறும் ஜடாயுவின் அண்ணன் சம்பாபதி என்னும் கழுகரசன இங்குள்ள முருகப் பெருமானை வேண்டி முக்தி பெற்ருர் என்ற காரணத்தினுல்தான் இம்மூர்த்திக்குக் கழுகாசல மூர்த்தி என்று பெயர் ஏற்படலாயிற்று என்று கூறுவர்.

இவ்விறைவன் அருணகிரிநாதரவர்களால் தமது திருப்புகழில் பெரிதும் பாராட்டப் பெற்றுள்ளார்.

அண்ணுமலை ரெட்டியார் அவர்களின் காவடிச் சிந்திலும், கழுகுமலைப் பிள்ளைத் தமிழிலும் இம்முருகப் பெருமானின் சிறப்புக்கள் போற்றிப் புகழப்படுகின்றன.

# கொற்கைப் பெருந்துறை

## தென் கோடித் துறைமுகம்

தமிழகத்தின் தென்கோடியில், திருநெல்வேலி மாவட்டத்தில், தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் பெருவழியில் உள்ளது கொற்கை என்னும் சிற்றூர்.

சங்க காலத்தில் இவ்வூர் பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் விளங்கி வந்தது. முத்துக்கும் முத்தமிழுக்கும் சிறந்தது பாண்டிநாடு என்று சிறப்பித்துப் பேசப்படுவதற்கு இவ்வூர் காரண மாக விளங்கி வந்திருக்கிறது.

## முத்துக் குளித்தல்

கொற்கையில் முத்துக் குளித்தலும் சங்கு விற்றலும் சிறந்த தொழிலாக இருந்து வந்தது என்பதையும், கொற்கையில் வாழ்ந்த மக்கள் படகுகளில் சென்று மீன்

பிடித்து வந்து அருகாமையிலுள்ள கரையோர ஊர்களில் வாணிபம் நடத்தி வந்தார்கள் என்பதையும், இந்நாட்டிற்கு வருகை புரிந்த மேலை நாட்டார் குறிப்புகளாலும் சங்க இலக்கியங்களில் காணப் பெறும் பாடல்களாலும் நன்கறியலாம். இப்பட்டினத்தைப் பற்றி வெண்கண்ணனுர் என்ற புலவர் அகநானூற்றில்

இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால் வடுத்தடுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்துறை
(பாடல் 130)

அதாவது கடல் அலைகளால் கொணர்ந்து வீசப் படும் ஒளி பொருந்திய முத்துக்கள் வேகமாகச் செல்லுகின்ற குதிரைகளைப் போக வொட்டாது தடுத்துக் கால்களில் வடுக்களை உண்டாக்கும்படியான கொற்கை கடற்றுறை என்பதாகும்.

## வலம் புரிச் சங்குகள்

மாமூலனுர் என்னும் புலவர் ஒளி உமிழும் முத்துக்களையும், வலம்புரிச் சங்குகளையும் சொரிகின்ற கொற்கைக் கடற்றுறையில் பழையரது அழகான பெண்கள் தங்கள் தெய்வத்தினை வணங்குவர் என்று குறிப்பிடுகின்ருர். அகநானூற்றில் 210–ஆவது பாடல் இச்செய்தியை வழங்குகின்றது.

## யார் யார் வாழ்ந்தனர்

பத்துப்பாட்டுள் ஒன்ருன மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனர் என்னும் புலவர் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனைச் சிறப்பித்துப் பாடுகிருர். ஆங்கு

கொற்கை நகரின் பெருமையினையும் அவர் கூறு கிறார். கொற்கை நகரமானது சிறந்த முத்துக்களையும் சங்கு குளிப்பார் இருக்கையினையும் கன்னன் போர் உறையும் சிறிய ஊர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது என்று தெரிவிக்கிறார்.

## தலை நகரம் - துறை நகரம்

கொற்கை ஒரு துறைப்பட்டினமாக மட்டும் இல் லாது அது ஒரு தலைநகரமாகவும் விளங்கி வந்தி ருக்கிறது. காவிரிப்பூம்பட்டினம் எவ்வாறு சோழர் களுக்குத் துறைமுகமாகவும் தலைநகரமாகவும் இருந்து வந்ததோ அதைப் போன்று கொற்கை பாண்டியர் களுக்கு இருவகையிலும் பயன்பட்டு வந்திருக்கிறது.

சிலப்பதிகாரத்தில் நீர்ப்படுகாதையில் (வரி 127–138) இளங்கோவடிகள், கொற்கையில் இருந்த வெற்றி வேற்செழியன் என்ற பாண்டிய மன்னன் மதுரை மாநகரில் முடி சூட்டிக்கொண்டான் என்று குறிப்பிடு கின்றார். ‘இந் நிகழ்ச்சி பாண்டியப் பேரரசன் நெடுஞ்செழியன் இறந்த பின்னர் அவனுக்கு அடுத்த படியான வெற்றிவேற் செழியன் முடிசூடியதைக் குறிக் கும்’ என்று திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தனது ‘பாண்டியர் வரலாறு’ என்னும் நூலில் குறித் துள்ளார்.

## பிற்காலத்தில் கொற்கை

மேற்கூறிய அனைத்துச் செய்திகளும் கொற்கை கி. பி. முதல், இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுகளில்

விளங்கிய நிலைமையைக் குறிப்பதாகும். இவ்வளவு சீரோடும் சிறப்போடும் இருந்த கொற்கை, கி. பி. நான்காம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டின் முன்பகுதிவரை எவ்வாறு இருந்தது என்பது தெரிய வில்லை. ஆனால் பிற்காலத்தில் கிடைக்கும் கல்வெட் டின் துணையைக் கொண்டு பார்ப்போமானால் சங்க காலத்தில் இருந்த முக்கியத்துவம் குறைந்துபோயிற்று என்பது தெரிய வருகிறது. சில சமயங்களில் தலை தூக்கி, 'நாடு' என்ற பிரிவின் தலைநகரமாக இருந்து, பின்னர் சாதாரணச் சிற்றூராகவும் விளங்கி வந்திருக் கிறது. கி. பி. 15, 16-ம் நூற்றாண்டில் கொற்கை என்ற பெயரே "பொற்கை" என்று திரிந்து வழங்கி மிகவும் தாழ்ந்த நிலைக்குச் சென்று விட்டிருக்கிறது.

## பாண்டியர் காலத்தில்

இடைக்காலப் பாண்டியர் காலத்தில் கொற்கை ஓரளவு தனது பெருமையை நிலைநாட்டி வந்திருக் கிறது என்பதைத் திருநெல்வேலி மாவட்டம் திருக்குறுங் குடியிலுள்ள வரகுண பாண்டியனுடைய நான்காம் ஆட்சியாண்டுக் (கி. பி. 772) கல்வெட்டு தெரிவிக்கிறது.

கொடையையும், கொடை அளிக்கப்பட்ட நிலத்தின் எல்லையையும் கூறும் கல்வெட்டு "கொற்கை போயின வழிக்குத் தெற்கும்" என்று தெரிவிப்பது, கொற்கைக் குப் போகக் கூடிய அளவுக்குப் பெருவழி ஒன்று இருந்துள்ளது என்பதையும், அப்படியானால் அது ஒரு சிறிய நகரமாக வேனும் அக்காலத்தில் திகழ்ந் திருக்க வேண்டுமென்பதையும் ஊகிக்கச் செய்கிறது.

அத்தோடு அன்று ஆட்சி ஆண்ட அரசனின் நன் மதிப்பையும் அது பெற்றிருந்தது என்பதையும் இதே மன்னனின் மற்றொரு கல்வெட்டு புலப்படுத்துகிறது.

திருசெந்தூரிலுள்ள சுப்பிரமணிய படாரருக்கு வேண்டும் வருடாந்திரச் செலவுக்காக 1400 காசைப் பல ஊர்ச் சபைகளின் பக்கல் கொடுத்து முதல் கெடாது வட்டி மட்டும் பெற்று அதைக்கொண்டு வருடாந்திரச் செலவைச் சரிக்கட்ட வேண்டும் என பாண்டிய மன்னன் கொடை அளித்தனன் எனக் கூறும் அக்கல்வெட்டு, அவ்வாறு காசு கொடுக்கப் பெற்ற ஊர்களில் கொற்கையும் இடம் பெற்றிருந்தது என்று தெரிவிக்கிறது.

“குடநாட்டுக் கொற்கை ஊரார் கை இன் முதன் கெடாமைப் பொலி ஊட்டுக் கொண்டு செலுத்துவதாக வைத்த நிறை காசு” என்று எழுதப் பெற்றுள்ளது இக்கல்வெட்டு இன்னொன்றையும் புலப்படுத்துகின்றது. அதாவது கொற்கை குட நாட்டில் ஒரு பகுதியாக விளங்கி வந்தது என்பதாகும்.

## சோழர் காலத்தில்

பிற்காலச் சோழர் காலங்களில் கொற்கை பெயர் மாற்றத்துக்கு உள்ளாகி யிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆத்தூர் என்னுமிடத்தில் காணப் படும் முதலாம் குலோத்துங்கனுடைய (கி. பி. 1070—1120) கல்வெட்டு,

“கொற்கை என்னும் மதுராந்தகநல்லூர்”

எனக் குறிப்பிடுகிறது. சோழ மன்னர்களிற் பலர் மதுராந்தகன் என்ற பட்டப் பெயரைச் சூடியிருந் திருக்கிறார்கள். இருப்பினும் இவ்வூர் முதலாம் இராச ராசனின் காலத்தில் தான் மாற்றப் பெற்றிருக்க வேண்டும் என்பதை, இவ்வூர் உத்தம சோழ வள நாட்டைச் சேர்ந்த குடநாட்டில் உள்ளது எனவரும் கல்வெட்டால் உணர்ந்து கொள்ளலாம். முதலாம் இராசராசனுக்கு உத்தம சோழன் என்ற ஒரு பட்டப் பெயரும் உண்டு.

## பிற் காலப் பாண்டியர் காலத்தில்

பிற்காலப் பாண்டியர் காலத்தில் கொற்கை மீண்டும் தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது.

கொற்கைக்கு இரண்டு கல் தொலைவிலுள்ள ஆத்தூரில் பாண்டிய மன்னன் ஜடாவர்மன் என்னும் ஸ்ரீ வல்லபனின் ஆறும் ஆட்சியாண்டுக் (கி. பி. 1127) கல்வெட்டு கிடைத்துள்ளது. அது அரசன் திருச்சிற்றம் பல தேவநல்லூரில் உள்ள நிலங்களுக்கு வரியை நிர்ணயம் செய்தான் என்று தெரிவிக்கையில், அவ்வூர் கொற்கை நாட்டில் உள்ளது என்று கூறுகிறது. ஊராக இருந்து கொற்கை ஒரு நாட்டின் தலைமையிடத் தைப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது என்று மேற்கூறிய கல்வெட்டால் புரிகிறது.

## ஊர்ப் பெயர்

"கொற்கை என்னும் மதுராந்தக நல்லூர்" என்ற பெயர் நாளடைவில் "கொற்கை என்னும் மதுரோதய

நல்லூர்'' என்று மருவி வழங்கி வந்துள்ளது. இதற்கு அக்கசாலை பிள்ளையார் கோயிலில் காணப்படும் கல்வெட்டொன்றைக் கூறலாம்.

''நம்பேரால் இத்தேவர்க்கு கட்டின வீரபாண்டியன் சந்தி'' என வருவதால் இக் கல்வெட்டு வீரபாண்டியனது என்று நிச்சயமாகக் கூறலாம்.

## அக்கசாலை

இங்கு மற்ருென்றையும் கூற வேண்டியுள்ளது. இப்பொழுது தனித்து விளங்கும் அக்கசாலை என்னும் ஊர் பிற்காலப் பாண்டியர் காலத்தில் கொற்கையோடு சேர்ந்த ஒரு பகுதியாக இருந்து வந்ததென்பதை ''கொற்கையான மதுரோதய நல்லூர் அக்கசாலை'' என வரும் கல்வெட்டினுல் உணர முடிகிறது.

## ஈஸ்வரமுடையார் கோயில்

அத்தோடல்லாமல் இப்பொழுது இங்கு காணப் படும் பிள்ளையார் கோயிலை இக்கோயிலிற் காணப் படும் முதற் குலோத்துங்கக் காலக் கல்வெட்டு முதல் பிற்காலப் பாண்டியர் காலக் கால்வெட்டு ஈருக ''ஈஸ்வர முடையார் கோயில்'' என்றே வழங்குகின்றன. எனவே, இது பிள்ளையார் கோயிலாக மாறியது சென்ற ஒரு சில நூற்ருண்டு காலத்திற்குள்ளாகத் தான் என்பது தெரிய வருகிறது.

## நாயக்கர்கள் காலத்தில்

கி. பி. பதினேழாம் நூற்ருண்டில் ஆண்ட நாயக் கர்கள் காலத்தில் கொற்கையானது ''பொற்கை

என்னும் மதிவரோதைய நல்லூர்'' என மாறு பட்டுள்ளது என்பது இவ்வூர்வாசி ஒருவரிடமிருந்து பெறப்பட்ட செப்புப் பட்டயத்தால் தெளிவாகிறது.

## செப்புப் பட்டயம்

இப்பட்டயம் விஜயராகவ நாயக்கர் (சுமார் கி. பி. 1760) நன்மைக்கும் அவருடைய அதிகாரிகள் நன்மைக்குமாக கொடையளிக்கப்பட்டதை விவரிப்ப தால் அவருடைய காலத்தியதாக இருக்கும் என நம்ப முடிகிறது.

இப் பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ள சகர யாண்டும் கொல்லம் ஆண்டும் ஒத்து வராமையால் அது உண்மையான ஆண்டுதான் என ஒத்துக்கொள்ள முடியவில்லை.

## அகழ்வாய்வு

நாயக்கர்கள் காலத்தில் "பொற்கை'' என வழங்கப் பட்டிருந்தாலும் இன்று தனது பழைய புகழார்ந்த பெயரான கொற்கையையே பூண்டு நிற்கிறது. சிற்றூராகக் காட்சியளிக்கும் இவ்வூரில் இதன் பழம் பெருமையை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் வரலாற்றுப் பழம் பொருள்களேனும், அல்லது வேறு பல சான்றுகளேனும் கிடைக்குமா என்ற எண்ணத்தில் 1969-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அகழாய்வு செய்தது.

## தமிழ் எழுத்துள்ள பானை ஓடுகள்

நற்பயனின் விளைவாக இப்பொழுது காட்சி அளிக்கும் கொற்கை தான் சங்க காலத்தில் தலைநகராக

வும் துறைமுகமாகவும் விளங்கிய கொற்கை நகர் என்று மெய்ப்பிக்கும் வகையில் "தமிழி" எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகளும், வெளிநாட்டார் உபயோகத்தில் கொண்டிருந்த பானை ஓடும், சங்கு வளையல் துண்டுகளும் கிடைத்துள்ளன. அத்தோடு இப்பகுதியில் மனித வாழ்க்கை தொடர்ந்து நடந்து வருகிறது என்பதற்குச் சான்றாகக் கட்டடப் பகுதி, மண்ணால் செய்யப்பட்ட மணிகள், விலையுயர்ந்த கல்மணிகள் போன்ற வேறு பல பொருள்களும் கிடைத்துள்ளன.

இங்கு கிடைத்துள்ள "தமிழி" எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகளைப் போன்று பாண்டிச்சேரிக்கு அருகாமையிலுள்ள அரிக்கமேட்டிலும், திருச்சியின் ஒரு பகுதியாகிய உறையூரிலும் கிடைத்துள்ளன.

வடக்கத்திய வண்ணம் பூசிய பானை ஓடு ஒன்றும் கிடைத்துள்ளது. இது தென்னாட்டுக்கும் வடநாட்டுக்கும் பண்டைய நாளில் இருந்த நெருங்கியத் தொடர்பை எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்று கருதப் படுகிறது.

## கொற்கையின் காலம்

அங்கு .கிடைத்துள்ளவைகளின் காலத்தை கி. பி. முதலிரண்டு நூற்றாண்டினதாக இருக்கலாம் எனக் கூறியுள்ளார்கள். அவ்வாறெனில் கொற்கையின் காலமும் சங்க காலத்திற்குச் செல்கிறது. அக்காலம் தொட்டு பற்பல மாறுதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட கொற்கை இன்றும் பொலிவு குன்றாது, அடக்கத்துக்கு எடுத்துக் காட்டாக, சிற்றூராகக் காட்சியளிக்கிறது.

## டாடா ஆராய்ச்சி நிலையக் கணிப்பு

கொற்கையின் அகழ்வாய்வின் போது கிடைத்த கரித்துண்டுகளைச் சேகரித்து பம்பாயில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பப்பட்டு, அதன் காலத்தைக் கண்டறிந்து கூறும்படி தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் வேண்டப் பட்டது. அவர்களும் நல்ல வண்ணம் ஆராய்ந்து அதன் காலத்தை கி. மு. 785 என்று கணித்துள்ளார் கள். எனவே கொற்கையில் இன்றைக்கு இரண்டா யிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பது அறிவியல் ரீதியாக நிரூபிக்கப் பட்டிருக்கிறது என்று கூறலாம்.



# பனைமலைத் தாலகிரீஸ்வரர் கோயில்

## குடைவரைக் கோயிலும், கட்டடக் கோயிலும்

தமிழகத்தில் இன்று காணப்பெறும் கோயில்களில் மிகவும் பழமை வாய்ந்தவை பல்லவர் காலக் கோயில்களாகும்

பல்லவர் காலக் கோயில்களைக் குடைவரைக் கோயில்கள் என்றும், கட்டடப்பெற்ற கோயில்களென்றும் இரு கூறுகப் பிரிப்பர் ஆராய்ச்சியாளர்கள்.

குடைவரைக் கோயில்கள் என்பது முன்னரே இருக்கப் பெற்ற ஒரு மலையில் சிறு பகுதியைக் குடைந்து உருவாக்கப் படுபவை ஆகும். பிற இடங்களிலிருந்து கற்களைக் கொண்டு வந்து ஒன்றின் மேல் ஒன்ருக அடுக்கி எடுப்பிக்கப்படுவது கட்டடப்பெற்ற கோயிலாகும். இந்த இருவகையான கோயில்களும்

வளர்ச்சி அடைந்த விதத்தை மூன்று காலக் கட்டமாகப் பிரிக்கின்றனர் வரலாற்றுசிரியர்கள்.

## மூன்று கட்ட வளர்ச்சி

குடைவரைக் கோயில்கள் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டு முதல் தோன்ற ஆரம்பித்து விட்டது. தொண்டை மண்டலத்தில் கி. பி. ஆரும் நூற்றுண்டு முதல், பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்திலிருந்து நிறைய ஏற்படலாயின. இதை முதல் கட்டம் என்பர்.

இம்மன்னனின் மகன் முதலாம் நரசிம்மன் காலத்திலும் குடைவரைக் கோயில்கள் எழுந்தன. முன்னர் உருவான குடைவரைக் கோயில்களுக்கும் நரசிம்மவர்மன் காலத்தில் தோன்றிய குடைவரைக் கோயில்களுக்கும் அமைப்பில் சில மாற்றங்கள் தென்படுகின்றன.

மண்டபங்களைத் தாங்கி நிற்கும் தூண்கள் சாதாரண நிலையில் இருப்பது மகேந்திரவர்மன் காலத்திய பாணி.

தூண்களை உட்கார்ந்திருக்கும் சிம்மங்கள் தாங்கியிருப்பது போன்று இருப்பது நரசிம்மன் காலத்திய அமைப்பு.

இதற்கு அடுத்த கட்டமாகக் கட்டப் பெற்ற கோயில்கள் எழுந்தன. அவை இராஜ சிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மன் காலத்தில் உருவாக்கப்பட்டவை.

இத்தகைய கோயில்கள் மாமல்லபுரத்தில் கடல் ஓரத்திலும், காஞ்சிபுரத்திலும், பனைமலையிலும் உள்ளன.

## பனை மலை

தென்னார்க்காடு மாவட்டத்தில், விழுப்புரத்துக்கு வடமேற்கே 22 கிலோ தொலைவில் அமைந்திருக்கும் சிற்றூரே பனைமலை என்பதாகும். இவ்வூருக்குப் பக்கத்திலே உள்ள குன்றில் கம்பீரமாகக் காட்சி அளிக்கும் திருக்கோயிலே தாலகிரீஸ்வரர் கோயிலாகும்.

## தாலகிரீஸ்வரர் கோயில்

தாலகிரி என்னும் வடமொழிச் சொல்லுக்குப் பனைமலை என்று பொருள். பனைமலை என்னும் தமிழ்ச் சொல் 'தாலகிரி' என்று வடசொல்லாக்கம் செய்யப் பட்டதா அல்லது நேர் மாருக மாற்றப்பட்டதா என்று தெரியவில்லை. தாலகிரியில் இறைவன் குடி கொண்டிருப்பதால் தாலகிரீஸ்வரர் என்று பெயர்பெற்றுள்ளார்.

## கோயில் அமைப்பு

கோயில் கிழக்குப் பார்த்து அமைக்க எண்ணியிருக்கின்றார்கள். ஆனல் சற்றே தெற்கு திசை திரும்பிய வண்ணம் அமைந்துள்ளது. கோயில் பீடத்திலிருந்து சுவர்ப் பகுதிவரை கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. விமானப் பகுதி முழுவதும் சுதை வேலைப்பாடாக உள்ளது. அங்குள்ள சிற்பங்கள் யாவும் சுதை வேலைப் பாடேயாகும்.

சதுர வடிவில் காணப்படும் உண்ணுழியில் பெரிய இலிங்கம் காணப்படுகிறது. உண்ணுழியின் பக்கச் சுவரில் சோமாஸ்கந்தர் உருவம் புடைச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

உண்ணுழியைச் சுற்றி குறுகிய திருச்சுற்று இருக்கிறது. திருச்சுற்றை அடுத்து பெரும் சுவர் அமைந்துள்ளது. இந்த நான்கு சுவர்களின் மீதுதான் விமானம் எழுந்துள்ளது.

உண்ணுழிக்கு முன்பாக இப்பொழுது ஒரு மண்டபம் காணப்படுகிறது. இது பிற்காலத்தில் எழுப்பப்பட்டதாகும். இந்த மண்டபத்தைப் பல தூண்கள் தாங்கி நிற்கின்றன.

## துணைக் கோயில்கள்

இக்கோயிலின் தெற்கு, மேற்கு, வடக்குகுப் பக்கங்களில் மூன்று சிறு கோயில்கள் இருக்கின்றன். இவை காஞ்சியில் காணப்பெறும் கைலாசநாதர் ஆலயத்தில் உள்ள சிறு கோயில்களைப் போன்றே உள்ளன.*

பெரிய கோயிலில் காணப்படும் இலிங்கத்தைப் போன்றே இச்சிறு கோயில்களிலும் இலிங்கங்கள் உள்ளன. அளவில் சற்று சிறியனவாகத் தோற்றமளிக்கின்றன. இலிங்கங்கள் எண்பட்டை வடிவிலோ அல்லது பதினாறு பட்டை வடிவிலோ அமைந்துள்ளன.

---

*இவை கிழக்கையோ அல்லது மேற்கையோ பார்த்த வண்ணம்தான் உள்ளன. வடக்கையோ அல்லது தெற்கையோ பார்த்த வண்ணம் இல்லை.

## பாயும் சிம்மங்கள்

உண்ணாழியின் வெளிப்புறச் சுவரில் தூண் பட்டைகளோடு தாங்கி நிற்பதாக அமைக்கப் பெற்றுள்ள சிம்மங்கள் இராஜசிம்மனை நினைவூட்டு கின்றன.

சிம்மங்கள் பாய்ந்து செல்லும் பாங்கில், முன்னிரண்டு கால்களை உயர்த்தி, பின்னிரண்டு கால் களை ஊன்றி நிற்கின்றன.

இவைகளுக்குக் கீழே உள்ள பட்டையில்தான் இக்கோயிலை எடுப்பித்த பல்லவ மன்னன் இராஜ சிம்மனின் கல்வெட்டு காணப்படுகிறது.

இந்த கல்வெட்டுக்குக் கீழே கால்களை மடித்துப் படுத்த நிலையிலுள்ள யானையின் தலைகள் காணப்படு கின்றன. அவை பாய்ந்து நிற்கும் சிம்மங்களால் போட்டு மிதிக்கப்படுவனவாகத் தோற்றமளிக்கின்றன. "யானைகளையெல்லாம் அடக்கியாள்பவன்" என்ற இராஜசிம்மனது பட்டப் பெயரை அவை உறுதி செய் வனவாகத் தோன்றுகின்றன.

சிம்மங்கள் அனைத்தும் சுதை வேலைப்பாட்டால் ஆனவை. இந்த சிம்மங்கள் தூண்களைத் தாங்கப் பெற்று, அத்தூண்கள் விமானத்தைத் தாங்குவதாகச் செதுக்கப் பெற்றிருப்பது இராஜசிம்மன் என்ற சிம்மம் விமானம் என்ற அரசைத் தாங்கியிருப்பதாகச் சித்தரிக்கப் பட்டுள்ளதோ என வியக்கும் படியாக உள்ளது.

## விமானச் சிறப்பு

உண்ணாழியின் மீது உயர்ந்து நிற்கும் விமானம் மூன்று தளங்கள் உடையதாக இருக்கிறது. ஒவ்வொரு தளத்திலும் சாலைகளும், கூடுகளும் அமைக்கப் பெற்றுள்ளன. மூன்று தளத்திலும் யாளி வரிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

விமானத்தை முழுமையாகப் பார்த்தால் காஞ்சி யிலுள்ள கைலாச நாதர் ஆலயத்தையும், மாமல்ல புரத்திலுள்ள கடற்கரைக் கோயிலையும் ஒத்துள்ளது புலப்படும். ஆனால் அவ்விரு கோயில்களுக்கும் பின்ன தாக இக்கோயில் கட்டப்பெற்றிருக்க வேண்டும் என்பது இக்கோயிலின் கட்டடக் கலையைக் கொண்டு ஊகிக்க முடிகிறது.

இராஜசிம்மன் எனும் இரண்டாம் நரசிம்ம வர்மன் ஆட்சிக் காலம் கி. பி. 7000 முதல் 730 வரை ஆகும். இவன் ஆட்சியின் இறுதிக் காத்தில்தான் பனை மலைக் கோயில் கட்டப் பெற்றுள்ளது.

## கல்வெட்டு

கோயிலின் பீடத்துக்கு மேலே உள்ள பட்டியில் கல்வெட்டு காணப்படுகிறது. இது கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டின் எழுத்துக்களும் காஞ்சி புரத்தில் உள்ள கைலாச நாதர் கோயிலில் காணப்படும் கல்வெட்டின் எழுத்துக்களும் ஒரே

மாதிரியாகத் தோன்றுகின்றன. கல்வெட்டில் உள்ள செய்தியும் ஏறக்குறைய ஒன்றையே குறிக்கின்றன.

இரு கல்வெட்டுகளும் பல்லவ மன்னர்களின் வழி முறையைக் கூறிவிட்டு, அத்தகைய சிறந்த வழியில் வந்தவன் இராஜசிம்மன் என்று புகழ்கின்றன.

பரமேஸ்வரன், குகனை - முருகனைப் பெற்றெடுத்தது போல் பரமேஸ்வரன் இராஜசிம்மனைப் பெற்றெடுத் துள்ளான் என்று அக்கல்வெட்டுகள் உவமித்துக் கூறு கின்றன. இராஜசிம்மனைச்சிங்கங்களின் அரசன் என்றும், "யானைகளை அடக்கியாள்பவன்" என்றும் பல பட்டப் பெயர்களால் குறிக்கின்றன.

## வண்ண ஓவியம்

தமிழகத்தில் கட்டடக் கோயில் உருவாகத் தொடங்கியதிலிருந்தே, கோயிலில் வண்ண ஓவியங்கள் தீட்டுவதும் பழக்கத்தில் இருந்திருக்கிறது. பழமை யான ஓவியங்களையும் பல்லவர் காலத்தில்தான் காண முடிகிறது. பனைமலையில் உள்ள இக்கோயிலிலும், காஞ்சி கைலாச நாதர் கோயிலிலும் நல்ல ஓவியங்களைச் சிறந்த முறையில் தீட்டியுள்ளனர்.

பாண்டியர் காலத்திலும், சோழர், விஜயநகர மன்னர்கள் காலங்களிலும் ஓவியம் தீட்டப்பட்டிருக் கிறது. இருப்பினும் பல்லவர் கால ஓவியங்களின் சிறப்பு தனித் தன்மைவாய்ந்தது. இவ்வோவியங்களில்தீட்டப் பட்டுள்ள வண்ணம், மிகவும் பளிச்செனக் காட்சியளிக் கிறது.

பல்லவர் காலத்துச் சிறந்த ஓவியத்துக்கு எடுத்துக் காட்டாகப் பனைமலை ஓவியத்தைத்தான் கூறுவர்.

## தேவியின் உருவம்

இக்கோயிலில், தேவியின் ஓவியம் எழிலாகத் தீட்டப்பட்டுள்ளது.

தேவி சிவபெருமானின் திருக்கூத்தைப் பார்த்து ரசிக்கின்றவளாய்க் காட்சி தருகிறாள். ஒற்றைக் காலை மடித்து ஒயிலாக நின்று கொண்டிருக்கிறாள்.

அவள் நிற்கும் பாங்கு கி. பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமராவதிச் சிற்பத்தையும், கி. பி. 5–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அஜந்தா ஓவியத்தையும் நினைவூட்டுகிறது.

இத்தேவி தலையிலே முடிதரித்து அரசமாதேவியர் போலத் தோற்றமளிக்கிறாள். தலைக்கு மேலே பூச் சக்கரக் குடை காணப்படுகிறது.

தேவியின் கழுத்து, கை, கால் ஆகியவற்றில் பல வித அணிகலன்கள் பூணப்பட்டிருக்கின்றன. அணிந்திருக்கின்ற உடை சிவப்பு வண்ணத்தில் பூக்கள் தீட்டப்பெற்று காட்சி தருகின்றன.

மணந்த தலைவனை மனங்குளிரப் பார்த்தபடி அழகாக இணைந்து நிற்கும் அந்த அணங்கின் ஓவியக் கோலம் மனதை விட்டு அகலாத சின்னமாகும்.

# தருவை சிவன் கோயில்

## வாளவல்ல பாண்டீஸ்வரர் கோயில்

திருநெல்வேலியிலிருந்து எட்டு கிலோ மீட்டர் மேற்கே, திருநெல்வேலி அம்பாசமுத்திரம் நெடுஞ்சாலை யில் அமைந்துள்ள சிற்றூரே தருவை என்பதாகும். வற்ருத வளம் சுரக்கும் தாமிரபரணி ஆறு ஊரின் வடக்கே ஓசை படாமல் ஓடிக்கொண்டிருக்கிறது.

## ஊர் அமைந்துள்ள இடம்

இந்தச் சிற்றூரிலும் மூன்று திருக்கோயில்கள் காட்சியளிக்கின்றன. ஒன்று வாளவல்ல பாண்டீஸ்வரர் கோயில்; மற்ருென்று திருமால் ஆலயம். மூன்ருவது அய்யஞர் கோயில். திருமால் கோயில் சிவன் கோயிலுக்கு மேற்காகக் காணப்படுகிறது. அய்யஞர் கோயில் ஊரின் தொடக்கத்தில் இடது பக்கத்தில் அமைந்துள்ளது. இம் மூன்று கோயில்களிலும்

வாளவல்ல பாண்டீஸ்வரர் கோயில்தான் இன்றும் அதிக அளவில் அழியாது, பழமை குன்றுது, பார்ப்போரை மெய் மறக்கச் செய்யும் சக்தி பெற்றதாகத் தோற்ற மளிக்கிறது.

## கோயில் பற்றிய கதை

தமிழிலக்கணத்தை ஆக்கியோர் என்று கூறப்படுப வரான அகத்திய மாமுனி, பொதிகை மலையிலிருந்து இப்பக்கமாக வருகையில் இவ்வூரின் அருமை அறிந்து தான் வணங்கும் சிவபெருமானுக்கு இங்கு ஒரு திருக் கோயில் எடுக்க ஆசைப்பட்டு, அவ்வாறே கோயில் எடுப் பித்து வழிபட்டார் என்பது இங்குள்ள மக்களால் கூறப் பட்டு வரும் பழங்கதை.

## உண்மை என்ன?

இக்கோயிலில் மிகுதியாகக் காணப்பெறும் கல் வெட்டுகளிலிருந்து பார்க்கையில் இரவிசங்கரன் என்னும் கூபகராயனுல் கி. பி. 13-ஆம் நூற்ருண்டில் இது கட்டப்பெற்றதாகத் தெரிகிறது. காலடி என்னும் ஊர் மலமண்டலத்திலே உள்ளது. இரவி சங்கரன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் வாழ்ந்தவன்.

## எந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன்

மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்று பல பாண்டிய மன்னர்கள் இருந்திருக்கின்றனர். இதில் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் மிகவும்

புகழ் பெற்றவன். இவன் சோழ மன்னன் மூன்றும் இராஜராஜனைத் தோற்கடித்து அவனது தலைநகரங்களான தஞ்சையையும், உறந்தையையும் தீக்கிரையாக்கியவன்.

மற்றொருவன் இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன். இவன் கி. பி. 1238 முதல் 1253 வரை அரசாண்டவன். இவனது கல்வெட்டுகள் "பூமலர் திருவும் பொருஜய மடந்தையும்" என்று ஆரம்பமாகும். இக்கோயிலில் காணப்பெறும் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுகளும் 'பூமலர் திருவும் பொருஜய மடந்தையும்' என்று ஆரம்பமாவதால் இம் மன்னன் இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் தான் என்பது உறுதியாகிறது.

## கோயில் அமைப்பு

கிழக்கு பார்த்த வண்ணம் கோயில் அமைந்துள்ளது. திருச்சுற்று வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் மணிமண்டபத்தைக் காணலாம்.

மணிமண்டபத்தின் உள்ளே செல்வதற்குத் தெற்கு வடக்கு ஆகிய இருபக்கங்களிலும் வாயிற்படிகள் உள்ளன. ஏதாவதொரு வாயிற்படி வழியாக ஏறி உள்ளே சென்றால் முக மண்டபத்தை அடையலாம்.

முக மண்டபம் பல தூண்களால் தாங்கப் பெற்று உள்ளது. முக மண்டபத்தைப் பார்த்த பின்னர் மேலும் உள்ளே சென்றால் அர்த்த மண்டபம் வழியாக மூலவர் உறையும் திரு உண்ணாழியைப் பார்க்கலாம்.

முழுமுதற் கடவுளான சிவபெருமானின் இலிங்கம் மூலவராகக் காட்சி அளிக்கிறது. நம்மையறியாமலே நமக்கொரு மோன நிலை ஏற்படுகிறது.

## சிந்தனையைக் கவரும் சிலைகள்

முக மண்டபத்தில் ஒரு ஓரத்தில் மயில் வாகனன் (முருகன்), ஆலமர் செல்வன், பைரவர் ஆகிய சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

ஆறுமுகன் தனது மயில் வாகனத்தில் அமர்ந் திருக்கும் காட்சி பக்தர்களுக்கு அன்பைச் சொரியும் பரவசக் காட்சியாகக் காணப்படுகிறது.

தென்திசைச் செல்வன் தன் அடியவர்களுக்கு அற முரைக்கின்ற நிலையில் உள்ளார். இந்தச் சிலைகள் அனைத்தும் வெளிப் பிரகாரத்திலிருந்து கொண்டு வந்து இங்கு வைக்கப்பெற்றவைகளாகத் தோன்றுகின்றன.

திருச்சுற்றின் தெற்குப் பக்கத்தில் உள்ள உற்சவ மண்டபத்தில் விநாயகர் சிலை ஒன்று உள்ளது. கிழக்கு வாயிலின் முன்பாக அதிகார நந்தியின் சிலை உயர்ந்த பீடத்தின் மேல் இருக்கிறது.

## திருச்சுற்று மாளிகை

இக்கோயிலில் திருச்சுற்று மாளிகையும் இருந் திருக்கிறது. ஆனால் இப்பொழுது அவை இடிபாடுற்ற நிலையில் உள்ளன.

திருச்சுற்று மாளிகையில் எட்டுத் திசைகளிலும் திசைக் காவலர்களுக்கென அமைந்த சிறு கோயில்கள் இருந்திருக்கின்றன.

இப்பொழுது தென்மேற்கு மூலையிலும் வடமேற்கு மூலையிலும்தான் கோயில்கள் உள்ளன. அவைகள் கூட அழிந்த நிலையிலேயே இருக்கின்றன.

## திருவிழாக்கள்

ஒவ்வொரு ஆண்டும் மார்கழித் திங்கள் திருவாதிரை திதி அன்று மூலவருக்குப் பெரிய அபிஷேகம் நடை பெறும்.

மாசி மாதம் சிவன் ராத்திரி அன்று நான்கு முறை அபிஷேகங்களும் ஆராதனைகளும் நிகழ்கின்றன.

ஆடி மாதம் பூரம் நாளில் உற்சவ மூர்த்தி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறார்.

மற்றும் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்தர் சஷ்டி, கார்த்திகைத் தீபம் ஆகிய நாட்களில் கோயிலில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன.

## செப்புத் திருமேனிகள்

உமையன்னையோடு கூடிய நடராஜர் அகிலாண்டேசுவரி, சந்திர சேகரர் ஆகிய செப்புத் திருமேனிகள் பெரிய அளவில் எழிலுற விளங்குகின்றன. இவைகள் பிற்காலப் பாண்டியர்காலப் பாணியில் செய்யப்பட்டன

என்பது தெளிவாகத் தெரிகிறது. சுப்பிரமண்யர், பிள்ளையார் ஆகிய உருவங்கள் சிறிய அளவில் வியக்கத்தக்கவாறு காணப்படுகின்றன.

### கல்வெட்டுகள்

இக்கோயில் முகமண்டபத்தின் மூன்று பக்கங்களிலும் மொத்தம் பத்து கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் பிற்காலப் பாண்டியர்கள் காலத்தைச் சேர்ந்தவை.

மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் (1268–1312) காலத்தைச் சார்ந்த ஒரு கல்வெட்டு இக்கோயிலில் உள்ள க்ஷேத்ரபாலருக்கு அர்த்த சாம பழனம் நடத்துவதற்காக ஒவ்வொரு மாதமும் ஒரு மரக்கால் நெல் சிலரால் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

ஒரு கல்வெட்டு இவ்வூரைக் கூபகராய நல்லூர் என்று குறிப்பிடுகிறது. பெரும்பாலும் இக் கோயிலை எடுப்பித்த கூபகராயன் என்பானின் பெயரால் இது அமைந்திருக்கக் கூடும்.

மற்றொரு கல்வெட்டில் தாமிரபரணி, ‘தண்பொருந்த பேராறு’ என்று குறிக்கப்படுகிறது.

### அம்மன் ஆலயம்

கோயிலின் வடக்குப் பக்கத்தில் தனியாக அம்மன் கோயில் காணப் படுகிறது. வழக்கமாக சிவன்

கோயிலின் திருச்சுற்றில் வடக்குப் பகுதியில் அம்மன் கோயில் இருக்கும். ஆனால் இங்கு திருச்சுற்று மதிலுக்கு அப்பால் தனியாக அம்மன் கோயில் எழுப்பப்பட்டிருக்கிறது. இதுவும் கிழக்குப் பார்த்தே உள்ளது.

இக்கோயிலின் நாயகி அகிலாண்டேஸ்வரி. இதற்கும் மணி மண்டபம், முக மண்டபம், அர்த்த மண்டபம் ஆகியவைகள் இருக்கின்றன.

திரு உண்ணாழியில் நாட்டைக் காக்கும் தலை நாயகி நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறாள்.

முக மண்டபத் தூண்களில் கைகூப்பிய வண்ணம் காட்சி அளிக்கும் உருவ அமைப்புக்களைக் கருத்தில் கொண்டு பார்ப்போமாயின், இக்கோயில் மிகவும் பிற்காலத்தியது என்றும், சுமார் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என்றும் தெரிந்து கொள்ளலாம்.



# குமரிக் கோணேரீஸ்வரர் கோயில்

## குமரித் தெய்வம்

கன்னியாகுமரி என்றாலே கன்னித் தெய்வமாம் பகவதி அம்மன்தான் நினைவில் வரும். பகவதி அம்மனின் மூக்கை அலங்கரித்து நிற்கும் ஒளி முத்து கடலில் பயணம் செய்பவர்களுக்குக் கன்னியாகுமரி எங்குள்ளது என்பதைக் காட்டும் கலங்கரை விளக்காகக் காட்சி அளித்திருக்கிறது என்று கூறுவர்.

குமரித் தெய்வம் குடியிருக்கும் கோயில் விண்ணூர்ந்து காட்சி அளிப்பது போலவே, வேறு சில கோயில்களும் அங்கு இருக்கின்றன.

தமிழகத்தின் தென் கோடியிலே உள்ள கன்னியாகுமரி, மூவேந்தர்களின் ஆட்சிக் காலத்திலும் நல்ல செல்வாக்குப் பெற்று இருந்திருக்கிறது. பிறகு ஆண்ட

சோழர்கள், பாண்டியர்கள் காலத்தில் சிறந்ததொரு புண்ணியத் தலமாக அது விளங்கியிருக்கிறது.

## பெரும்பேறு

சோழ அரசர்கள் கன்னியாகுமரிக்கு வந்து குமரித் தெய்வத்தை வணங்குவது தாங்கள் பெற்ற பெரும் பேருக எண்ணியிருக்கிருர்கள்.

குமரிக் கோயிலுக்கு நித்திய நிவந்தங்களுக்காக பொன்னும் பொருளும், நிலமும் கொடையாக அளித்து வந்திருக்கின்றனர்.

## சோழர்களின் ஆதரவு

சோழ மன்னன் இராசராசன் காலம் முதல் அக் கோயிலுக்குச் சோழ மன்னர்கள் பலவித கொடை அளித்துள்ளனர் என்பதை அவர்கள் காலத்திய கல்வெட்டுகள் பகவதிக் கோயிலில் காணப்படுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

## வீர ராசேந்திரன் கல்வெட்டு

சோழர்களின் வமிச வழியைப் பற்றித் தெளிவாகக் கூறும் சோழ மன்னன் வீரராசேந்திரன் (கி. பி. 1063-1070) காலத்தியக் கல்வெட்டும் இக்கோயிலின் அர்த்த மண்டபத் தூண்களில்தான் காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டு சோழர்களின் வரலாறு எழுதுவதற்குப் பெருந்துணை புரிகிறது.

## கோனேரீஸ்வரர் கோயில்

பகவதிக் கோயில் எந்த அளவுக்கு பழங்கால மன்னர்களின் கவனத்தை ஈர்த்ததோ அதைப் போன்றே மற்ரெரு கோயிலும் அவர்களது கொடைச் சிறப்பால் புகழ் பெற்றிருக்கிறது. அதுதான் கோனேரீஸ்வரர் என்ற திருக்கோயில்.

## இருப்பிடம்

இக்கோயில் இப்பொழுது அங்கு காணப்பெறும் கிறித்துவக் கோயிலுக்கு எதிர்த் திசையில் நெடுஞ்சாலே யின் ஓரத்தில் சிறிது உள்ளடங்கி உள்ளது. கோபுர வாயில் இடிந்து வீழ்ந்து விட்டமையாலும், கருவறை யின் மேலே இருக்கக் கூடிய விமானம் முழுதுமாக சிதைந்து விட்டதாலும் இக்கோயிலேக் கண்டுகொள்வது எளிதாக இராது. இது கிழக்குப் பார்த்த கோயில்.

## கோயில் அமைப்பு

ஒரே ஒரு திருச்சுற்றை உடைய இக்கோயிலின் நுழைவாயிலேக் கடந்து உள்ளே சென்ருல் மணி மண்ட பத்தைக் காணலாம். இம்மணி மண்டபத்துக்கு மூன்று வாயிற்படிகள் உள்ளன. மணி மண்டபத்தின் நேர்த் திசையில் ஒன்றும், தெற்கு வடக்கான இருபக்கங்களி லும் இரண்டு படிகளும் காணப்படுகின்றன.

ஏதாவது ஒரு படியின் வழியாக ஏறி உள்ளே சென்ருல் முகமண்டபத்தை அடையலாம். முகமண்ட பத்தைக் கடந்தால் அர்த்த மண்டபம் காணப்படும்.

அதை அடுத்து உண்ணாழி. உண்ணாழியில் மூலவராகச் சிவலிங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. சிவலிங்கத்தின் வடிவே அது சோழர் காலப் பாணி என்பதைக் காட்டி விடுகிறது.

சிவலிங்கத்தைத் தவிர வேறு தெய்வங்களின் சிலைகளைக் காணமுடியவில்லை. கோயிலில் உண்ணாழியின் பக்கச் சுவர்களில் ஆழமான மாடங்களோ, அம்மாடங்களில் சிவபெருமானின் வேறு சில மூர்த்தங்களோ காணப்படவில்லை.

வழக்கமாகக் காணப்பெறும், விநாயகர், தக்ஷிணா மூர்த்தி, லிங்கோத்பவர், நான்முகன், துர்க்கை ஆகிய உருவங்களையும் காணமுடியவில்லை. ஆனால் குழிவற்ற மாடங்களும், அதன் மேலே மகர தோரணங்களும் காணப்படுகின்றன. அத்தோரணங்களின் நடுவில் இலேசான புடைச் சிற்பங்களாக நரசிம்ம மூர்த்தியும், ஆனைமுகத்தோனும், சுப்பிரமண்யரும் காட்சி அளிக்கின்றனர்.

இவைகளும் சோழர் கால முற்காலக் கட்டடக் கலைக்குச் சான்றாக அமைந்துள்ளன.

## யார் காலத்துக் கோயில்?

இக்கோயில் சோழர் காலத்துக் கோயில்தான் என்பதும், அதுவும் சோழ மன்னன் முதலாம் இராசராசனின் நினைவாக அவரது அருமைந்தன் முதலாம் இராசேந்திரன் எடுப்பித்தது என்பதும் அக்கோயிலிலேயே காணப்பெறும் கல்வெட்டுகளால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இக்கோயிலில் மொத்தம் பதினான்கு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கல்வெட்டுகளில் இக்கோயிலின் இறைவன் 'இராஜராஜேஸ்வரம் உடையார்' என்று குறிக்கப் பெறுகிறார். அப்படியானால் இக்கோயில் "இராஜ ராஜேச்சுரம்" என்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு காணப்பெறும் கல்வெட்டுகளில் மிகப் பழமையானது முதலாம் இராஜேந்திரனைச் சார்ந்தது. அக்கல்வெட்டில் இறைவன் "இராஜ ராஜேச்வர முடையார்" என்றுதான் குறிக்கப் பெறுகிறார். அப்படியானால் இராஜேந்திரனுக்கு முன்பாக ஆண்ட முதலாம் இராஜ இராஜன் பெயர்தான் இதற்கு சூட்டப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இது முதலாம் இராஜ ராஜன் காலத்தில் எடுப்பிக்கப்படவில்லை என்பதை இங்கு முதலாம் இராஜ ராஜனது கல்வெட்டுகள் காணப்படாததால் அறிந்து கொள்ளலாம்.

எனவே இது முதலாம் இராஜேந்திரன் காலத்தில் தான் எடுப்பிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

## கல்வெட்டுகள் கூறுவது என்ன?

முதலாம் இராஜேந்திரனின் இருபத்தோராம் ஆட்சி யாண்டு தொடங்கி முப்பதாம் (கி. பி. 1035 முதல் கி. பி. 1044 வரை) ஆட்சி ஆண்டு வரை ஆறு கல்வெட்டுகள் இங்கு பொறிக்கப்பட்டுள்ளன.

முதலாம் இராஜேந்திரனின் மகனான முதலாம் இராஜாதிராஜன் காலத்திய கல்வெட்டு ஒன்றும், விக்ரம

சோழ பாண்டியர், இரண்டாம் இராஜேந்திரன், விக்ரம சோழ தேவர், மூன்ரும் இராஜராஜன் ஆகியோர் காலத்தியக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இரண்டு கல்வெட்டுகள் பா வடிவில் அமைந்துள்ளன.

இக்கல்வெட்டுகளிலிருந்து இக்கோயில் முதலாம் இராஜேந்திரன் காலம் (கி பி. 1014 கி. பி. 1044) முதல் மூன்ரும் இராஜராஜன் காலம் (கி பி. 1216-1256) வரை சோழ மன்னர்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்தது என்பதும், நல்ல வழிபாட்டு வசதிகளோடு திகழ்ந்தது என்பதும் தெரியவருகிறது.

## சாலாபோகம்

நாஞ்சில் நாட்டு மணக்குடியில் வாழ்பவர்களால் "சாலாபோகமாக" இங்கிருந்த மடம் ஒன்றுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் கல்வெட்டு கூறுகிறது.

## நீர்ப் பந்தல்

"ஜயங்கொண்ட சோழர் நீர்ப் பந்தல்" என்று ஒன்று இங்கு இருந்தது என்றும், அது இவ்வழியே வரும் வழிப்போக்கர்களுக்கு நீர் வழங்கி தாகம் தீர்த்தது என்பதையும் கல்வெட்டு தெரிவிக்கிறது.

## காசி விசுவநாதர் கோயில்

கன்னியாகுமரியில் காசிவிசுவநாதர் கோயில் என்னும் மிகவும் பிற்காலத்தியக்கோயில் ஒன்றும் உள்ளது.

இக்கோயில் கி. பி. 17–18 ஆம் நூற்றுண்டுகளில் ஆட்சி புரிந்த நாயக்க மன்னர்களது காலத்தில் எடுப்பிக்கப் பெற்றிருக்கவேண்டும். இது மிகவும் அழிந்த நிலையில் இன்று காணப்படுகிறது.

உருவ அமைப்புக்களைக் கருத்தில் கொண்டு பார்ப் போமாயின் இக்கோயில் மிகவும் பிற்காலத்தியது என்றும், சும்மார் கி. பி. 18-ஆம் நூற்றுண்டில் கட்டப் பட்டிருக்கலாம் என்றும் தெரிந்து கொள்ளலாம்.



# வேடியப்பன் கோயில்

பாணன் கூற்று

அரும்புகழ் பாடி அழுதழுது நோனது
இடும்பையுள் வைகிற்றிருந்த—கடும்பொடு
கைவண் குரிசில் கற் கை தொழூஉச்செல் பாண
தெய்வமாய் நின்ருன் திசைக்கு—புற. வெ. மாலே.

பாணனே! கைவளப்பத்தினையுடைய நம் தலைவன் இப்பொழுது எட்டு திசையினும் வாழ்வார்க்கு வணக்குந் தெய்வமாகி நின்ருன். ஆதலால் அவ்வுபகாரி இப்பொழுது உலகிலின்மையானே அழுது அழுது பொருதே- துன்பத்துள்ளே தங்கியிருந்த நின் சுற்றத்தோடு, அவன் பீடும் பெயரும் எழுதி நட்ட கல்லினைக் கைகூப்பி வணங்கி அவன் போர்க்களத்தே பகைவரைக் கொல்லும் புகழினைப் பாடிப் போவாயாக.

என்று ஒரு பாணன் மற்ருெரு பாணனிடம், தங்கள் தலைவன் இறந்து கல்லாகித் தெய்வமானதைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது மேலே காட்டிய பாடல்.

## வடார்க்காடு மாவட்டம்

இவ்வாறு கல்லாகித் தெய்வமாகியப் போர்வீரர் களின் சிலைகள் தமிழகத்தில் சில பகுதிகளில் காணப் படுகின்றன. குறிப்பாக வடார்க்காடு மாவட்டத்தில் இந்த நடுகற்கள் ஏராளமாக இருக்கின்றன என்பதைச் சங்க இலக்கியமான மலைபடுகடாம்,

**நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்**
**சொல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட**
**கல்ஏசு கவலை எண்ணும் மிகப் பலவே**

என்று விரித்துரைக்கிறது.

## இல் புகுதல்

போரில் வீரமரணமடைந்த போர் வீரனுக்கு நடுகல் நட்ட பின்னர் அவனைத் தெய்வமாகவே கருதி வந்தனர் தமிழக மக்கள். அத்தெய்வத்துக்குக் கோயில் எடுப் பித்துச் சிறப்பித்ததை,

**வாட்புகா ஊட்டி வடிமணி நின்றியம்பக்**
**கோட்புலி அன்ன குரிசில்கல்—ஆட்கடிந்து**
**விற்கொண்ட வெற்றி விறள் மறவர் எல்லோரும்**
**இற்கொண்டு புக்கார் இயைந்து**

என்று ‘இற்கொண்டு புகுதல்’ என்ற துறையில் புறப் பொருள் வெண்பாமாலைப் புலப்படுத்துகிறது. இவ்

வாறு அமைக்கப்பட்ட கோயில்களை இன்றும் சிறப்பாகக் கோயம்புத்தூர் மாவட்டப் பகுதியில் காணலாம். அவை கல்லறை ((*Dolmen*) வடிவத்தில் உள்ளது.

## தொல்லியல் துறை பணி

தமிழகத்தின் மற்றப் பகுதிகளில் வேடியப்பன் கோயில் என்று இந்நடுகற்களை வணங்கிப் போற்றி வருகின்றனர் தமிழக மக்கள். நூற்றுக்கும் மேற்பட்ட நடுகல் கல்வெட்டுக்களைத் தமிழ்நாடு தொல்லியல் துறை படியெடுத்துள்ளது.

## பிற மாவட்டங்கள்

இத்தகைய கோயில்கள் வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் காணப்படுவதற்கும் கோவை மாவட்டத்தில் காணப்படுவதற்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. பெரும்பாலும் இம்மாவட்டங்களில், ஊர்களின் புற எல்லையில் தான் இக்கோயில் காணப்படுகிறது.

## நடுகல் நிலை

போரில் வீரமரணம் எய்திய வீரனின் உருவம் செதுக்கப்பெற்று, அவனது பீடும் பெயரும் பொறிக்கப் பெற்று காணப்பெறும் பலகைக்கல் ஒன்றோ, இரண்டோ சில இடங்களில் மூன்றோ, நான்கோ—மண்ணில் புதைத்து நிறுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான இடங்களில் துரிஞ்சி மரத்துக்குக் கீழ்தான் இக்கற்கள் காணப்படுகின்றன. சுற்றிலும் முட்செடிகள் வளர்ந்துள்ளன.

சுவாமியிடம் செல்வதற்கு நேர்வழி விட்டு இருபுறமும் மண்ணுல் செய்து சுடப்பெற்ற பெரும் குதிரைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. பக்கத்தில் சில ஆண் தெய்வங்களும் மண்ணுல் செய்து சுடப்பட்டு வைக்கப் பட்டிருக்கின்றன.

## சிலேகள்

சில இடங்களில் இரும்பிஞல் செய்யப்பெற்ற வேல் கள் சுவாமிக்கு முன் நிறுத்திவைக்கப் பெற்று ஒரு பயங்கரமான சூழ்நிலேயைத் தோற்றுவிக்கின்றன. மற்றும் சில இடங்களில் வெறும் கற்பலகைகள் மட்டும் வரிசையாக நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதையே காண முடியும். கற்பலகைகளே அங்குள்ள மக்கள் 'சிலேகள்' என்று அழைக்கின்றனர்.

## பட்டான் கோயில்

இத்தகைய கோயிலே ஒவ்வொரு பகுதியிலும் ஒவ் வொரு பெயரிட்டு அழைக்கின்றனர். சில இடங்களில் மீஞரப்பன் (முனியப்பன் என்பது மீஞரப்பன் என்று மருவி வழங்குகிறது) என்றும், அய்யஞரப்பன் என்றும், ஆஞ்சநேயர் என்றும், கிருஷ்ணுரப்பன் என்றும், சிறை மீட்டான் என்றும், வேடன் கோயில் என்றும், பட்டான் கோயில் என்றும் பல பெயர்கள் இட்டு அழைத்து வருகின்றனர். பட்டான் கோயில் என்ருல் இறந்தவன் கோயில் என்று பொருள். இதையே கோயம்புத்தூர் மாவட்டத்தில் வேட்டுவன் கோயில் என்று கூறுகின்றனர்.

## வேடியப்பன் கோயில்

ஆனுல் பெரும்பாலான இடங்களில் ;வேடியப்பன் கோயில் என்றுதான் வழங்கப் படுகிறது. வேடியப்பன் என்பது வேட்டுவ அப்பன் என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். ஏனெனில் நடுகல்லில் காணப்பெறும் பெரும்பாலான உருவங்களில் ஒரு கையில் வில்லும் மற்ருெரு கையில் குறுவாளும், பக்கத்தில் அம்புகளும் காணப்படுகின்றன. அவை அப்போர் வீரன் ஒரு வேடன் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

## சிலேயார் சிலே

தருமபுரி மாவட்டத்தில் அரசன்பட்டி, சிவன்பட்டி, புலிக்கரை, மத்தூர், இருமத்தூர், ஆகிய ஊர்களில் இக் கோயில்களேச் ‘சிலேயார்’ சிலே என்று அழைப்பதும் மேற்கூறிய கருத்தை உறுதிப்படுத்துகிறது. சிலேயார் என்பதற்கு, வில்லே உடையவர் என்று பொருள். வில்லே உடையவர் வேடுவராகத்தான் இருத்தல் வேண்டும்.

## அடையாளச் சின்னங்கள்

நடுகற்களில் வீரனது உருவத்தோடு பலவித அடையாளச் சின்னங்களும் காணப்படுகின்றன.

பல்லவ மன்னர்கள் சிம்ம விஷ்ணு, மகேந்திர வர்மன், நரசிம்மவர்மன் ஆகியோரது காலத்திய நடுகற் களில் வீரனின் உருவத்துக்குமேலே இரு பக்கங்களிலும் இரு பூமாலேகள் தொங்க விடப்பட்டுள்ளன.

## பூமாரி

இவை 'புகையணங்கப் பூமாரி சிந்தி' என்று வரும் புறப்பொருள் வெண்பாமாலை தொடருக்கேற்ப, வீர னுக்குச் சிலை யெடுத்துப் பூமாரி பொழிந்து மக்கள் போற்றி வணங்கியதைக் காட்டுவதாக அமைகிறது.

## கால மாற்றம்

வீரனது கால்களுக்குப் பக்கத்தில் சிமிழ், கெண்டி, மதுக்குடம், அம்புக் கூடு, குத்துவிளக்கு போன்றவை களும் காணப்படுகின்றன. சில பிற்காலத்திய நடுகற் களில் கண்ணுடியின் உருவம் ஒன்றும் வீரனுக்குப் பக்கத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

வீரனது உருவிலும் அவன் கொண்டிருக்கின்ற பொருள்களிலும் காலத்துக்குக் காலம் சில மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது. சிம்ம விஷ்ணு காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் வீரன் நேராகப் பார்த்த வண்ணம் வலது கையில் பெரிய வாளும், இடது கையில் கேடயமும் ஏந்திக் காணப்படுகிருன்.

பல்லவ மன்னர்களில் பிற்காலத்திய மன்னர்களின் காலத்தல் வீரனது இடது கையில் வில் குடியேறி விட்டது.

சோழ மன்னன் பராந்தகன் காலத்தில் நடுகற்கள் அனைத்திலுமே இடது கையில் வில்தான் காணப்படு கிறது.

எனவே நடுகற்களில் எழுத்துக்கள் ஏதும் காண முடியவில்லையென்றாலும் உருவ அமைதியை வைத்தே அந்நடுகல் எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்பதைக் கணித்துவிட முடியும்.

## நடுகற்களின் வழிபாடு

இன்று இந் நடுகற்களை மக்கள் மிகவும் பயபக்தியுடன் வழிபடுகிறார்கள். வலிமை பொருந்திய தெய்வத்தின் சக்தி அதில் உள்ளது என்றும், அதன் அருகில் பெண்கள் செல்வதே தகாது என்றும் கருதுகிறார்கள். ஆண்களிலும் எல்லாரும் சுவாமியின் அருகில் சென்றுவிட முடியாது. நல்ல தூய்மையாக இருப்பவர்களும் வயதானவர்களும்தான் செல்ல முடியும். யார் சென்றாலும் கோயிலுக்கு நூறு கெஜ தூரத்துக்கு வெளியிலேயே காலணிகளைக் கழற்றி வைத்துவிட்டுத்தான் செல்லல் வேண்டும். சிறப்பாகத் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் அதன் அருகில் செல்லக்கூடாது என்கின்றனர். அதேபோன்று அவர்களும் அதன் அருகில் செல்வதற்கு மறுக்கிறார்கள்.

## பூசை நைவேத்தியங்கள்

ஆண்டுக்கு ஒரு முறை ஊராரும் சுற்றுப்புறத்து மக்களும் ஒன்றுகூடி விழா எடுக்கிறார்கள். விழா பெரும்பாலும் இரவு நேரத்தில்தான் நடைபெறுகிறது. ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு பொங்கல் பொங்கி கோயிலுக்கு வெளியிலேயே வைத்துப் படைக்கிறார்கள். சிலர் கோயிலுக்கு விடப்பட்டு வளர்த்து வந்த ஆடுகள், கோழிகள் ஆகியவைகளையும் பலியிடு

கிறுர்கள். இந்த செய்கைகளும் ஓரளவு அச்சத்தை ஊட்டுவதாகவே அமையும்.

தங்கள் பகுதிகளில் மழை பெய்யவில்லையென்றுல் அப்பொழுதும் விழா எடுத்து ஆண்டவனை வழிபடு கிறுர்கள். அவ்வாறு செய்கையில் உடன் மழை தந்து தங்களை உய்விக்க அருள் பாலித்திருக்கின்றுர் தங்களது இறைவன் என்று மெய்சிலிர்க்கக் கூறுகிறுர்கள்.

### வழிபாட்டுப் பாடல்


அவ்வாறு பூசை செய்து வழிபடும்போது சில பாடல்களையும் இசைக்கின்றனர். அவர்கள் கூறுகின்ற பாடல்கள் கருத்தாழம் செறிந்ததாகக் காணப்படு கின்றன. அப்பாடல்கள் இறைவனை 'வேடுவன்' என்றே போற்றுகின்றன. வேடியப்பன் என்பது 'வேட்டுவ அப்பன்' என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். மோத்தக்கல்லைச் சேர்ந்த ஒருவர் அங்கு வழங்குவதாகக் கூறிய கீழ்வரும் நாட்டுப் பாடல் இக்கருத்துக்கு துணை செய்கிறது.

ஆற்றங்கரை வேடுவனே அதிகாரம் பெற்றவனே
துண்டு தடிகாரா தூரபோன வல்லவனே
வில்லால் மிகுந்தவனே வேடுவனே யான் சரணம்.


சர்வம் சரணமப்பா சாட்சாங்க தெண்டனிட்டேன்
ஆறுதப்பு நூறுபிழை அடியேன் யான் செய்தாலும்
அப்பா மனம் பொறுத்து அனைவரையும் காத்தருளும்.

வெள்ளைக் குதிரையேறி வெளிப்பட்டு வரவேண்டும்
வெண்கலத் தமுக்கு போட்டு வீசி நீ வரவேண்டும்
மூங்க வனத்தை விட்டு வெளிப்பட்டு வாருமப்பா.

## நடுகல் படங்கள்



மோத்தகல் நடுகல்
கி. பி. 7 ஆம்
நூற்ருண்டு



கீழ்முட்டுகூர் நடுகல்
கி. பி. 10 ஆம்
நூற்ருண்டு

# வெற்றியின் சின்னங்கள்

## வீரத்தின் விளைவு

பழங்கால மன்னர்கள் ஒருவரோடொருவர் போர் புரிந்து கொள்வதும், தாங்கள் வெற்றி பெற்றதன் நினைவுச் சின்னமாக மாற்று நாட்டரசர்களின் போர் வீரர்களைக் கைதிகளாக்கித் தங்கள் நாட்டுக்குக் கொணர்ந்து ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்துவதையும், தோல்வியுற்ற மன்னர்களின் பொன்னையும் பொருளை யும் கவர்ந்து வந்து தங்கள் கருவூலங்களை நிரப்புவதை யும் அவர்களின் உடன்பாடு கொண்ட வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவ்வாறே தாங்கள் வெற்றி கொண்ட நாடுகளிலிருந்து சில கலைப்பொருட்களையும் திரட்டி வந்திருக்கின்றனர் பண்டைய மன்னர்கள்.

## கலை மாற்றம்

ஒரு பகுதியிலுள்ள கலைப்பாணியினை இன்னொரு பகுதியில் அமைப்பதுவும், ஒரு பகுதியிலிருக்கும் கலை

விற்பன்னர்களைப் பிறிதொரு பகுதிக்கு இட்டுச் செல்வதும் கூடத் தொன்மை வழக்கமாக இருந்தது.

தமிழகத்துப் பகுதிகளில் மகத நாட்டுத் தச்சரும் அவந்தி நாட்டுக் கொல்லரும் நடமாடியதை நமக்குப் பட்டினப் பாலை எடுத்துக் காட்டுகிறது.

இன்று கச்சியம்பதியிலே காட்சிக்கு அரியதாய் விளங்கும் கைலாய நாதர் ஆலயத்தைக் கண்டுதான் இராட்டிரகூட மன்னன் முதலாம் கிருட்டிணன் எல்லோராவில் கைலாயநாதர் ஆலயத்தை அமைத்துள்ளான் என்பார் வரலாற்ருசிரியர்கள்.

## போசளேச்சுரர் கோயில்

திருச்சிக்கு அண்மையில் கண்ணனூரிலே எழிலார்ந்த உருவமாக ஏற்றமுடன் தோற்றமளிக்கும் போசளேச்சுரர்கோயில் போசளரின் கைவண்ணமன்ருே! இவ்வாறு பலப்பல சான்றுகளைக் காணலாம்.

## வெற்றியின் சின்னமா? கலை ஆர்வமா?

பிற பகுதிகளிலுள்ள பாணியைப் பார்த்து மற்ருெரு பகுதியில் அமைத்ததோடு அல்லாது பிற பகுதியில் இருந்த சில கலைப் பொருட்களையே தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கின்றனர். அம்மாதிரி தமிழ் மன்னர்கள் சிலர் பிற பகுதியிலிருந்து சில சிற்பங்களை எடுத்து வந்திருக்கின்றனர். இதனை இன்று அழியாச் சான்றுகளாக விளங்கும் அந்தச் சிற்பங்கள் மூலமே நாம் தெரிந்து கொள்ளலாம். இந்தச் சிற்பங்

களை அவர்கள் தாங்கள் அந்நாட்டின் மீது வெற்றி கொண்டதற்கு அடையாளமாக அமைய வேண்டு மென்று எண்ணியும் எடுத்து வந்திருக்கலாம். அல்லது அந்நாட்டுக் கலைகளின் மீதெழுந்த ஆர்வத்தாலும் அவைகளைக் கொணர்ந்திருக்கலாம்.

### கங்கை கொண்டான்

சோழப் பேரரசன் முதலாம் இராசேந்திரன் தான் கங்கையாற்றங் கரையிலே போர் நிகழ்த்தி அப்பகுதி அரசர்களைப் புறமுதுகிடச் செய்தான் என்பதை அவனது கல்வெட்டுகள் 'கங்கையும் கடாரமும் கொண்டான்' என்று புகழ்ந்து கூறும். அதற்கு மேலும் வலுவூட்டுவதாக அவனுல் கொண்டு வரப்பட்ட அந்நாட்டுக் கலைப்படைப்புகளும் தமிழகத்தில் இன்று காட்சி தந்து வருகின்றன.

### இரண்டாம் தலைநகர்

சோழர்களின் இரண்டாம் தலைநகராகப் பழையாறை சிறந்து விளங்கிற்று. அதற்கு வெகு அண்மையிலுள்ள குடமூக்கும் (கும்பகோணம்) சோழ மன்னர்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது.

குடமூக்கு சிவத்தலமாகவும், வைணவத்தலமாகவும், சிறப்புற விளங்கி வந்திருக்கிறது. சைவ சமயத்தைச் சார்ந்தார்க்குத் திருநாகேச்சுரர் கோயிலும், வைணவ சமயத்தைச் சார்ந்தார்க்கு இராமசாமிக் கோயிலும் அருள் பாலிக்குந் தலங்களாக விளங்குகின்றன.

## திருநாகேச்சுரர் கோயில்

திருநாகேச்சுரர் கோயில் சோழ மன்னன் முதலாம் ஆதித்தன் காலத்தைச் சார்ந்தது என்று கணிக்கின்றனர்.

இக்கோயில் கருவறையின் மாடங்களில் காட்சி தரும் பெருமானின் கோலங்கள் பார்ப்போரைத் தம்மை விட்டு அகலா வண்ணம் செய்துவிடுகின்றன. அத் தகைய அழகும், அமைதியும், கலைத்திறனும், கருத்தாழமும் கொண்டதாக அச்சிற்பங்கள் காட்சி அளிக்கின்றன. அச்சிற்பங்களைக் காண நேரும் வெளிநாட்டார்கள் வியந்து வியந்து பாராட்டிச் செல்கின்றனர்.

## கங்கை விநாயகர்

இத்தகையச் சோழர் கலைப் பாணிகளுக்கிடையே சற்று மாறுபட்ட கலைப்பாணியைக் கொண்ட ஆனை முகன் உரு ஒன்று அங்குக் காட்சி அளிக்கிறது. அது செய்யப்பட்டிருக்கிற கல்லும் மாறுபட்ட வண்ணத்தில் உள்ளது. அதன் பெயர் 'கங்கை விநாயகர்' என்று கூறப்படுகிறது. பெயரிலிருந்தும், அதுவடிக்கபட்டிருக்கின்ற முறையிலிருந்தும், கல்லின் வண்ணத்திலிருந்தும் சோழர் கலைப்பாணிக்கு முற்றிலும் மாறுபட்டது என்பதை உணர முடிகிறது.

கங்கைப் பகுதியிலே ஆட்சி புரிந்தவர்களின் கலைப் பாணியோடு அவ்வுருவத்தை ஒப்பிட்டு நோக்குகையில், அது அவர்களுடைய பாணிதான் என்பது புலனாகிறது. எனவே இச்சிற்பம் கங்கை வரை படையெடுத்துச்

சென்று வெற்றிவாகை சூடிய முதலாம் இராசேந்திரன் தான் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று எண்ண லாம்.

**கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில்**

தஞ்சைப் பெருவுடையார் கோயில் எவ்வாறு முதலாம் இராசராசனின் புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களனாக நிற்கிறதோ அது போன்று அவன் அருமை மைந்தன் முதலாம் இராசேந்திரனின் வெற்றிச் சிறப்பை எட்டுத்திக்கும் கொட்டி முழக்கும் வண்ணம் எடுப்பாகக் காட்சி அளிப்பதுதான் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காண முடி யாத சில கலைப்படைப்புகளை கங்கைகொண்ட சோழ புரத்துக் கோயிலில் காணலாம். கோயிலின் வடக்குப் பக்க நுழை வாயிலில் இரு பக்கங்களிலும் உள்ள கலைச் செல்வி, சண்டேசுவரனுக்ரக மூர்த்தி ஆகிய சிற்பங்கள் உலகப் புகழ் பெற்ற சிற்பங்களாகும்.

**முருகன் ஒற்றுமை**

இக்கோயிலின் சுவர் மாடத்தில் காட்சி தரும் முருகப் பெருமானின் உருவமும், கோயிலினுள் உற்சவ மூர்த்தியாக உள்ள முருகப்பெருமானின் செப்புத் திரு மேனியும் ஒரே வடிவாக உள்ளது அருமையிலும் அருமை என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

### செங்கமேடு

சோழர் கலைப்பாணியின் காட்சிக் கூடமாக விளங்கும் இக்கோயிலுக்கு மூன்று மீட்டர் தொலைவு கிழக்கே செங்கமேடு என்ற சிற்றூரில் ஒரு தோப்பில் கலிங்க நாட்டுக் கலைப்பாணியில் பைரவர் உருவங்கள் இரண்டு சிவப்புக் கல்லில் செதுக்கப்பட்டுக் காட்சியளிக்கின்றன.

அவைகளைத் தற்பொழுது தமிழ் நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை தனது பாதுகாப்பின் கீழ்க் கொணர்ந்து பாதுகாத்து வருகிறது.

### கலிங்கச் சிற்பங்கள்

அவ்வுருவங்கள் அங்கு எவ்வாறு வந்தன. கங்கை கொண்டானுல் எழுப்பப் பெற்ற ஆலயத்தின் அருகில் எவ்வாறு அவை இடம்பிடித்தன என்று ஆராய்வோமானுல், அவைகளை முதலாம் இராசேந்திரன், தான் கலிங்கப் பகுதிகளை வென்றதன் நினைவாகக் கொண்டு வந்திருக்க வேண்டும் எனத் தொல் பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் திரு இரா. நாகசாமி அவர்கள் கருதுகிருர்கள்.

### சாளுக்கியர் பாணி

கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அருகில் உள்ள வீரா ரெட்டித் தெருவில் காணப்படும் துர்க்கை உருவமும், மணல் மேட்டில் உள்ள துர்க்கை

உருவமும் சாளுக்கிய பாணியில் உள்ளன. அவை சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டு வந்திருக்கலாம்.

## முதலாம் இராசாதிராசன்

முதலாம் இராசேந்திரனின் மூத்த மகன் முதலாம் இராசாதிராசன் தன் தந்தையைப் போன்றே பெரு வீர ஞகத் திகழ்ந்தவன்.

இவன் பாண்டியர், சேரர், சிங்களர், சாளுச்கியர் ஆகியவர்களோடு வெஞ்சமர் புரிந்து வெற்றி வாகைச் சூடியவன்.

## சாளுக்கிய வெற்றி

இம்மன்னன் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனேடு போர் புரிந்து, அவனைத் தோற்கடித்து, அன்மன்னனது கம்பிலி நகரிலிருந்த கோட்டையைத் தகர்த்தெறிந் ததுவும், வராக முத்திரை பொறிக்கப் பெற்றிருந்த இடத்திலெல்லாம் தனது புலி முத்திரையைப் பொறித் ததுவும் வெற்றித்தூண் நாட்டியதுவும் இவனது கல் வெட்டுகளால் அறிய முடிகிறது.

## துவாரபாலர் சிலை

அவ்வாறு போர்ப் பரணி நடத்திப் புலவர்களால் புகழ்ப் பரணி பெற்றவன் இவன். சாளுக்கியர்களின் தலைநகரான கல்யாண புரத்தை வெற்றி கொண்டதன் அடையாளமாக அங்கிருந்து துவாரபாலர் சிலை

யொன்றை முதலாம் இராசாதிராசன் எடுத்து வந்திருக்கிருன். அச்சிலை சில ஆண்டுகளுக்கு முன்புவரை கும்பகோணத்துக்கு அருகிலுள்ள சிற்றூரான தாராசுரம் இராசராசேச்சுரம் உடையார் கோயிலில் வைக்கப் பெற்றிருந்தது. அது இப்பொழுது தஞ்சை கலைக் கூடத்தில் பொது மக்களின் காட்சிக்கு வைக்கப் பெற்றிருக்கிறது.

அச்சிலையினுடைய பீடத்தில்,

'ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ விசய ராசேந்திரத்
தேவர் கல்யாணபுரம் எறிந்து கொண்டு வந்த
துவாரபாலர்'

என்று எழுதப் பெற்றுள்ளது.

## சிற்ப அமைப்பு

அதன் சிற்பவமைதியைக் காணுங்கால் சோழர் காலத்துத் தமிழ் நாட்டுக் கலைப் படைப்புக்களோடு ஒத்தில்லாமல் மாறுபட்டுக் காணப்படுகிறது. எனவே இது சாளுக்கிய நாட்டிலிருந்து இராசாதிராசனின் வெற்றியின் சின்னமாகக் கொண்டு வந்தது தான் என்பது உறுதியாகிறது.

இதைப் போன்று பல வெற்றிச் சின்னங்கள் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவந்திருக்கக் கூடும்.

## இலங்கைச் சிற்பங்கள் எங்கே ?

இலங்கை நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற தமிழ் மன்னர்கள் அந்நாட்டிலிருந்தும் சில கலைப்

படைப்புகளைக் கொண்டு வந்ததாகத் தெரிகிறது. அவைகளெல்லாம் அழிந்தொழிந்துவிட்டனவா? அல்லது நாம் இன்னும் கண்டு கொள்ள முடியாத நிலையில் உள்ளோமா? என்பது தெரியவில்லை. காண்பதற்கு முயற்சிப்போம். கலையைப் பேணிக் காப்போம்.



